மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 14 செவ்வாய்க்கிழமை (30.09.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 286






# நியாயமான தீர்வுத் திட்டத்தை தமிழர்கள் கைவிட மாட்டார்கள்

## சிறிகாந்தா எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

நியாயமான தீர்வுத்திட்டம் ஒன்றுடன் அரசாங்கம் வருமாயின் அந்தச்சந்தர்ப்பத்தை தமிழர்கள் ஒருபோதும் நழுவ விடமாட்டார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிகாந்தா தெரிவித்துள்ளார். எனினும், தமிழர்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை யாரும் நிராகரித்து விடமுடியாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றப் பாதுகாப்பிலுள்ளவர்களை யாழ்.நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த பணிப்பு

(யாழ்ப்பாணம்)

உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரணடைந்து நீதிமன்றப் பாதுகாப்பிலுள்ள அனைவரையும், அவர்களின் பாதுகாப்பை நீடிப்பதற்காக யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு குடாநாட்டிலுள்ள ஏனைய 4 நீதவான் நீதிமன்றங்களுக்கும் நீதிச் சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

உயிருக்கு அச்சுறுத்தல் எனத் தெரிவித்து நீதிமன்றப் பாதுகாப்பில் யாழ். சிறைச்சாலை மற்றும் புனர்வாழ்வு நிறுவனங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்கள் 14 நாட்களுக்கு ஒருமுறை பாதுகாப்பு நீடிப்பதற்காக முன்னர் ஆஜரான நீதவான் நீதிமன்றில் முற்படுத்த வேண்டும்.

எனினும் போக்குவரத்திலுள்ள பாதுகாப்பு பிரச்சினைகள் காரணமாக நீதிமன்றப் பாதுகாப்பிலுள்ள அனைவரையும் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்துமாறு நீதிச் சேவை (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதியின் கூற்றை கண்டித்து ஐ.தே.க.ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சிறுபான்மையினருக்கு எதிராக தெரிவித்திருந்த கருத்துக்களை கண்டிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி நேற்று எதிர்ப்பு போராட்டமொன்றை ஒழுங்கு செய்திருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கபீர் ஹாசிம் மற்றும் வஜிர அபேவர்த்தன ஆகியோர் இந்தப் போராட்டத்திற்கு தலைமைதாங்கியுள்ளனர்.

இராணுவத் தளபதியின் இந்தக் கூற்று அரசாங்கத்தின் கருத்தை பிரதிபலிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி கருதுவதாக வஜிர அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

யுத்தம் மூலமாகவே இனப்பிரச்சினைக்கு தீர்வு எட்ட முடியும் என்ற நிலைப்பாடு இராணுவத் தளபதிக்கு உரிய தன்மை அல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் மூலம் எவருக்கும் நன்மை கிட்டாது எனவும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்குச் சட்ட அறிவித்தலால் மக்கள் மத்தியில் நேற்று பதற்றம்

(யாழ்ப்பாணம்)

513-வது பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாய், சுன்னாகம், சங்குவேலி, மாகியப்பிட்டி உட்பட்ட சில பகுதிகளில் நேற்று நண்பகல் திடீரென நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தால் மக்கள் மத்தியில் பதற்றம் நிலவியது.

மாகியப்பிட்டியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தினையடுத்து நேற்று பிற்பகல் 12 மணி தொடக்கம் ஊரடங்குச் சட்டம் இராணுவத்தினரால் திடீரென அமுல்படுத்தப்பட்டது.

இது தொடர்பான அறிவித்தல் ஒலிபெருக்கி மூலம் இராணுவத்தினரால் அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து மேற்குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள அரச அலுவலகங்கள் மூடப்பட்டு ஊழியர்கள் வீடுகளுக்குத் திரும்பினர்.

வர்த்தக நிறுவனங்கள் உடனடியாக இழுத்து மூடப்பட்டன. வீதிகள் எங்கும் வெறிச்சோடிக் காணப்பட்டன. குறிப்பிட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது கடமைகளை கைவிட்டு (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவச் சீருடையில் சென்ற புலிகள் படையினர் மீது கைக்குண்டுத் தாக்குதல்

### மாகியப்பிட்டியில் சம்பவம்

(கொழும்பு)

சண்டிலிப்பாய் மாகியப்பிட்டியில் இராணுவச் சீருடையில் சென்ற விடுதலைப் புலிகள், படையினர் மீது கைக்குண்டுத்தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மாகியப்பிட்டியிலுள்ள ஆலயம் ஒன்றிற்கு அருகில் நேற்றுக்காலை 11 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது குறித்து பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

மாகியப்பிட்டியிலுள்ள இந்து ஆலயம் ஒன்றிற்கு அருகில் மூவர் இராணுவ உடையில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதை அங்கு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து அவர்களுக்கு அருகில் சென்ற படையினர் அடையாளத்தை நிரூபிக்குமாறு கேட்டனர். அப்போது இராணுவச் சீருடையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடிப்பையடுத்து 7 இளைஞர்கள் கைது

(கொழும்பு)

புறக்கோட்டையிலுள்ள மல்வத்தை வீதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தினையடுத்து கோட்டை, புறக்கோட்டை ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட தேடுதலில் ஏழு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மற்றும் மலையகத்தைச் சேர்ந்த இளைஞர்களே கைது செய்யப்பட்டதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

படையினரும் பொலிஸாரும் இணைந்து நடத்திய தேடுதலில் பலர் விசாரணைக்கு உட்படுத்தப் (12 ஆம் பக்கம் பார்க்க)

# இரண்டு இடங்களில் குண்டு வெடிப்பு

## மட்டக்களப்பில் 20 பேர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடியில் நேற்றிரவு இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் சிறுவர்கள் உட்பட இருபதுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காத்தான்குடி பஸ் நிலையத்துக்கு எதிரேயுள்ள பள்ளிவாசல் ஒன்றுக்கு முன்பாக சன நடமாட்டம் நிறைந்திருந்த வேளை குண்டு வெடிப்பு இடம்பெற்றதாகவும் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் 2 மோட்டார் சைக்கிளும் சேதமடைந்து காணப்படுவதாகவும் பிரதேசத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவத்தில் காயமடைந்த 5 சிறுவர்கள் உட்பட 16 பேர் தமது வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டதாக காத்தான்குடி மாவட்ட வைத்திய அதிகாரியான டாக்டர் யு.என்.நஸூடின் கூறினார்.

இரண்டு பேருக்கு மிகவும் மோசமான காயங்களும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் 6 வாகனங்கள் சேதம்

(கொழும்பு)

கொழும்பின் மையப் பகுதியான புறக்கோட்டையில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார். 6 வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

புறக்கோட்டையிலுள்ள மல்வத்தை வீதியில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 12.40 மணியளவில் இக்குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

வாகனத் தரிப்பிடத்திலேயே குண்டு வெடித்ததாகவும் அங்கு காவல் கடமையில் ஈடுபட்ட பெண் ஒருவரே காயமடைந்தார் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை குண்டு வெடிப்புச் சம்பவத்தில் அதிர்ச்சியடைந்த பொது மக்கள் இருவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# 2010இல் சகல பாடசாலைகளிலும் விசேட கல்வி அமுல்படுத்தப்படும்

## வடக்கு மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நிஷாந்தி திருலிங்கநாதன் செவ்வி

வடக்கு மாகாண விசேட கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நிஷாந்தி திருலிங்கநாதன் யாழ்.மாவட்டத்தில் விசேட கல்வித் திட்டத்தை அமுலாக்கும் பொருட்டு வளவாளர் பயிற்சிக்காக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார். அவரை அண்மையில் சந்தித்தோம்.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரின் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் தொகுப்பு இங்கு தரப்படுகின்றது. (ஆ-ர்)



சாதாரண வகுப்பறையில் விசேட தேவையுடைய மாணவர்களையும் வைத்து கற்பிக்கும் முறையை அமுல்படுத்துவதில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது.

2010ஆம் ஆண்டுக்குள் வடக்கு மாகாணம் முழுவதிலுமுள்ள பன்னிரெண்டு கல்வி வலயங்களிலும் விசேட கல்வித் திட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படும்.

இதற்காக ஒவ்வொரு பாடசாலைகளிலும் விசேட கல்வி அலகும் விசேட கல்விக்கான ஆசிரியர் நியமனங்களும் இடம்பெறும்.

2010ஆம் ஆண்டில் வடக்கு மாகாண பாடசாலைகள் முழுவதிலும் விசேட கல்வியை ஆரம்பிக்கும் முதற்கட்ட நடவடிக்கையாக, யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து வலயங்களையும் உள்ளடக்கி வளவாளர் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

இப்பயிற்சியில் ஐந்து கல்வி வலயங்களையும் சேர்ந்த விசேட கல்விக்கான ஐந்து ஆசிரிய ஆலோசகர்களுடன் பதினெட்டுப் பேருக்கு இப் பயிற்சி வழங்கப்படும்.

இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு கல்வ் வலயத்திலும் தலா ஐம்பது ஆரம்ப ஆசிரியர்களுக்கு விசேட கல்விக்கான பயிற்சி வழங்கப்படும். இதற்கான பூர்வாங்க வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

### சகலரினதும் ஒத்துழைப்பு தேவை

விசேட தேவை உடைய மாணவர்கள் என்ற வகுதிக்குள் பார்வைக்குறைபாடு, கேட்டல் குறைபாடு. அங்கவீனம் மற்றும் உளக்குறைபாடு போன்ற பாதிப்புகளை உடையவர்கள் உள்ளடக்கப்படுவர்.

இத்தகைய மாணவர்கள் தமக்கு இருக்கக் கூடிய குறைபாட்டினால் ஏனைய மாணவர்களுடன் சமனாக இருந்து கற்கும் வாய்ப்பு கிடைக்காமல் இருப்பது நாம் அவர்களுக்குச் செய்யும் கெடுதியாக அமையும். எனவே தான் மேற்குறிப்பிட்ட விசேட தேவையுடைய மாணவர்களை சாதாரண வகுப்பறையில் ஏனைய மாணவர்களுடன் சமமாக வைத்து கற்பிக்கும் நடவடிக்கைகள் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான உட்படுத்தல் கல்வி மூலம் அமுலாகவுள்ளது.

சமுதாயத்திற்குக் கட்டாய தேவையாகவுள்ள இத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு சகல தரப்பினரினதும் ஒத்துழைப்பு அவசியமாகும்.

குறிப்பாக விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோரின் ஒத்துழைப்பு அவசியமாகும்.

இத்தகைய மாணவர்களை வீடுகளில் வைத்திருக்காமல் தாம் சார்ந்த வலயக் கல்விப் பணிமனைகளுடன் தொடர்பு கொண்டு தமது பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்ப்பதற்கான ஆலோசனைகளையும் வழிகாட்டலையும் பெற வேண்டும்.

இதற்கு மேலாக அதிபர்கள், ஆசிரியர்கள் ஏனைய மாணவர்களின் பெற்றோர்கள், மாணவர்கள் என சகல தரப்பினரும் மனவிருப்போடு வழங்குகின்ற ஒத்துழைப்பிலேயே விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் செய்பாடு தங்கியுள்ளது.

### விசேட பயிற்சிகள் வழங்கப்படும்

விசேட தேவையுடைய மாணவர்களை சாதாரண வகுப்பறையில் இருத்தி கற்பிப்பதற்குத் தேவையான சகல பயிற்சிகளும் வழங்கப்படும்.

உளநிலை பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஒவ்வொரு பாடசாலைகளிலும் இயங்கும் விசேட கல்விப் பிரிவில் வைத்து பயிற்சி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அப்பயிற்சி மூலம் பிரஸ்தாப மாணவரில் ஏற்படும் முன்னேற்றத்தின் திருப்தி நிலையை வைத்துக் கொண்டு ஏனைய மாணவர்களுடன் அந்த மாணவர் சேர்க்கப்படுவது குறித்து முடிபெடுக்கப்படும்.

இவர்களுக்கான பயிற்சிகள் நடனம், விளையாட்டு, பாடல் என்ற கற்பித்தல் முறைகளினுடாக முன்னெடுக்கப்படும்.

இதன் மூலம் குறைபாடுடைய மாணவர்களின் கல்விக்கான களம் அமைக்கப்படும் சந்தர்ப்பம் ஏற்படும்.

விசேட கல்வியைப் பொறுத்தவரை தென்பகுதியில் சிறப்பாக இயங்குவதைக் காண முடிகின்றது. அதற்குக் காரணம் மகரகம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விசேட கல்வியில் பயிற்சி பெற்ற சிங்கள ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இதனால் அங்கு விசேட தேவையுடைய மாணவர்கள் சாதாரண வகுப்பறையில் இருந்து கற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக தமிழில் இப்பயிற்சிகள் இல்லை. இதனால் ஆசிரியர்களின் பற்றாக்குறை விசேட கல்வியை முன்னெடுப்பதற்கு தடையாக இருந்தது. இத்தடையை முறியடிக்கும் வகையில் விசேட கல்வியை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வழங்கப்படும்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை யாழ் மாவட்டத்தில் விசேட கல்விச் செயற்பாடு மிகவும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை இங்கு விசேட தேவையுள்ள மாணவர்களும் அதிகமாக உள்ளனர்.

எனவே பாடசாலைகள் தோறும் விசேட கல்விப்பிரிவு அமைக்கப்பட்டு அதற்கு பயிற்றப்பட்ட ஆசிரியரும் நியமிக்கப்பட்டு 2010ஆம் ஆண்டில் விசேட தேவையுடைய அனைத்து மாணவர்களும் ஏனைய மாணவர்களுடன் சேர்ந்து கற்கும் வாய்ப்பு முழுமை பெறும்.

தொகுப்பு: வி.விஜயசுந்தரம்

## யாழ்.மாவட்டத்திலுள்ள ஐந்து வலயங்களிலும் 250 ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்க ஏற்பாடு

---

## ஒரு கிலோ சீனியின் விலை 76 ரூபாயாக நிர்ணயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு றுகுணு கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட சிவப்பு நாட்டரிசி, சீனி ஆகிய பொருள்கள் மாவட்டத்திலுள்ள 24 ப.நோ.கூ.சங்கங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப் பொருள்களுக்கான வழங்கற் கட்டளைகளை ப.நோ.கூ.சங்கங்கள் இன்று மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் பெற்று பொருள்களை களஞ்சியங்களிலிருந்து பெற்று, விநியோக நடவடிக்கைகளை பங்கீட்டு அட்டையில் பதிந்து விநியோகிக்குமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

ஒரு கிலோ சிவப்புநாட்டரிசியின் விற்பனை விலை 81 ரூபாயாகவும் ஒரு கிலோ சீனியின் விற்பனை விலை 76 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ச)

## முன்பள்ளி விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையம் நடத்தும் மகாமாரி முன்பள்ளியின்விளையாட்டு விழா நாளை புதன் கிழமை முற்பகல் 9.30 மணி க்கு மகாமாரி அம்மன் ஆலய முன்றலில் திருமதி சா.அமுதினி தலை மையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை பிரதேச சபை செயலாளர் கணேசானந்தராஜாவும் கௌரவ விருந்தினர்களாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை கலாசார உத்தியோகத்தர் இ.ஜோன்சன், புளியங்கூடல் கிராம சேவையாளர் க. சகாதேவன், முன்னாள் பிரதேச சபை செயலாளர் கு.கணேசலிங்கம், வேலணை மேற்கு நடராஜா வித்தியாலய அதிபர் கு.ஞான சோதியன், சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் மகேந்திரன் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர். (ச-3)

## ஜனாதிபதி நாடு திரும்பினார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 63 ஆவது கூட்டத் தொடரில் பங்குபற்றுவதற்காக அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று அதிகாலை நாடு திரும்பினார்.

இலங்கையில் சமாதானம் மற்றும் அபிவிருத்தி போன்ற விடயங்கள் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்து இந்த உச்சிமாநாட்டின்போது உலகத் தலைவர்களுக்கு ஜனாதிபதி விளக்கமளித்திருந்தார்.

பயங்கரவாதத்தைத் தோற்கடித்து நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை அடைவது குறித்து இம்மாநாட்டில் கலந்துகொண்ட உலகத் தலைவர்கள் பலருடனும் ஜனாதிபதி இருதரப்புப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருந்தார். (ச-5)

## தீவக கல்வி வலய அதிபர் கலந்துரையாடல்

தீவக அதிபர்களுக்கான கட்டாயக் கல்வி, விசேட கல்வி தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 03ஆம் திகதி காலை 9.30 மணிக்கு வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடை பெறும். இக்கலந்துரையாடலில் மாகாணக் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். எனவே சகல அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தீவக வலயக்கல்விப்பணிப்பாளர் வி. இராதா கிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)


## குருத்துவத்தில் வெள்ளி விழா நிறைவு



குருத்துவப் பணியில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்து 01.10.2008 காலை 10.30 மணிக்கு அருள் ஆச்சிரமத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கும் செபமாலை தாசர் சபையின் மாகாண முதல்வர்

**அருட்திரு. பிலிப் ஸ்ரனிஸ்லஸ் டொன் பொஸ்கோ**

அடிகளாரை வாழ்த்தி பாராட்டுவதுடன் அவரின் அருட் பணி தொடர இறை ஆசி வேண்டுகின்றோம்.

இல.5, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (C-1617) செபமாலை தாசர் சபை, அருள் ஆச்சிரமம்.

## இன்று ஒரு தகவல்

### ஏழையின் உருவில் இறைவன்

ஆன்மீகப் பெரியவர் ஒருவர் சுற்றுப் பயணம் போய்க் கொண்டிருந்தார்.

ஒருநாள் மாலை 4மணி இருக்கும். அந்தப் பெரியவர் வீதி வழியாகப் போய்க் கொண்டிருந்தார்.

வழியில் ஏகப்பட்ட அடியார்கள் அவரை வணங்கி ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு போனார்கள்.

அங்கே பல சின்னக் குழந்தைகளும் நின்று கொண்டிருந்தார்கள். எல்லாம் ஏழைக் குழந்தைகள். அவர்கள் போட்டிருந்த சட்டைகளெல்லாம் கிழிந்து அழுக்காக இருந்தது.

அந்தப் பிள்ளைகளைப் பார்த்ததும் பெரியவர் உள்ளம் உருகினார். மேற் கொண்டு நடக்காமல் அங்கேயே நின்றுவிட்டார்.

இதைப் பார்த்த அவரது உதவியாளர் ஒரு முக்கிய காரியத்திற்காக அடுத்த ஊருக்குப் போய்ச் சேர வேண்டும் என்று ஞாபகப் படுத்துவதற்காக சென்றார்.

ஆனால் அதற்கு முன்னரே பெரியவர் அவரைக் கூப்பிட்டு காதோடு காதாக ஏதோ சொன்னார்.

இதைக் கேட்ட உதவியாளர் வேகமாக எங்கேயோ போக ஆயத்தமானார். அந்த அவசரத்திலும் அங்கே எத்தனை குழந்தைகள் இருக்கின் றனர். ஆண்குழந்தைகள் எவ்வளவு? பெண்குழந்தைகள் எவ்வளவு? யார் யாருக்கு என்னென்ன வயது இருக்கும். எல்லாவற்றையும் கவனமாகப் பார்த்துக் கொண்டு போனார்.

அவர் போனதும் பெரியவர் அந்தக் குழந்தைகளை பாடச் சொல்லி அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

நேரமாகி விட்டது. உதவியாளர் பல மூட்டைகளை அள்ளிக் கொண்டு வந்து சேர்ந்தார். எல்லாம் குழந்தைகள் போட்டுக் கொள்வதற்கான துணிமணிகள்.

பெரியவர் அந்தக் குழந்தைகளையெல்லாம் கூப்பிட்டு ஆசீர்வதித்து, தன் கையாலேயே அத்தனை குழந்தைகளுக்கும் துணிமணிகளை எடுத்துக் கொடுத்தார்.

அந்தப் பிள்ளைகளும் மிக்க மகிழ்ச்சியுடன் அவற்றை வாங்கி உற்சாகத்துடன் போட்டுக் கொண்டார்கள். ஆனால் பெரியவருடன் வந்தவர்களெல் லாம் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

பக்கத்து ஊருக்குப் போய் பூஜை ஒன்று செய்ய வேண்டியிருக்கிறது. காலம்கடந்து விட்டது. என்ன செய்வது?

பெரியவரை அணுகிபூஜை இருப்பதை ஞாபகப் படுத்தினார்கள்.

அதற்கு அந்தப் பெரியவர் என்ன சொன்னார் தெரியுமா? பூஜையா? அது தான் இங்கேயே ஆகிவிட்டதே.

ஏழைக்குழந்தைகளுக்கு ஆடைகள் கொடுத்தோமே! அது தான் பூஜை! இது போதும்! என்றார்.

ஏழைகளின் உருவில் இறைவனைப் பார்க்க வேண்டும் என்று சொல்கிறோம் அல்லவா! அதற்கு இது தான் உதாரணம்.

இதை சரியாகப் புரிந்து கொள்ளாத சிலர் இறைவனையே ஏழையாக்கி பார்க்கிறார்கள்!

ஆமாம்! ஆண்டவன் போட்டிருக்கும் நகையையே திருடிக் கொண்டு போய் விடுகிறார்கள்!

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# அரச சார்பற்ற நிறுவனங்களைக் கண்காணிக்க விரைவில் சட்டமூலம் சபையில் முன்வைக்கப்படும்

## சமூக சேவைகள் பிரதி அமைச்சர் பிரேமசிறி தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறவனங்களைக் கட்டுப் படுத்துவது தொடர்பான சட்டமூலம் வெகுவிரைவில் பாராளுமன்றத்தில் முன் வைக்கப்படுமென சமூக சேவைகள், சமூக நலன்புரித் துறை பிரதி அமைச்சர் லயனல் பிரேமசிறி தெரிவித்தார்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்து பாராளுமன்றத் தெரிவுக்குழு முன் வைத்த பிரேரணைகளை உள்ளடக்கியதாக இந்தச் சட்டமூலம் முன் வைக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தச் சட்டமூலம் சமூக சேவைகள் மற்றும் சமூகநலன்புரித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் அடுத்த வாரம் குறிப்பிட்ட சட்டமூலம் குறித்து கண்காணிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

இந்த விடயத்தில் நான் கூடுதல் அக்கறையுடன் செயற்படுவதால் மிக விரைவில் அதனை நிறைவேற்றிவிட முடியும். அடுத்த மாதளமள்வில் இந்தச் சட்டமூலத்தை பாராளுமன்றத்திற்கு கொண்டு வர முடியும் எனப் பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதுடன் அவர்களின் வரவு -செலவுத்திட்டம் மற்றும் ஒப்பந்தத்துக்கு அமைய அவர்கள் செயற்படுகின்றனரா என்பது பற்றியும் கண்காணிக்கப்படும் என அவர் கூறினார்.

இந்தப் புதிய சட்டமூலத்தின் மூலம் அரச சார்பற்ற நிறுவனங்கள் சட்டம் மற்றும் பொருளாதார விடங் களில் தலையிடுவது பற்றிய நெறி முறைகள் அறிமுகப் படுத்தப் படும் எனவும் சமூக சேவைகள், சமூக நலன்புரித்துறை பிரதி அமைச்சர் லயனல் பிரேமசிறி மேலும் தெரிவித்தார். (அ-6)

# சர்வதேச சிறுவர் தினம்

(பருத்தித்துறை)

சர்வதேச சிறுவர் தினவிழாவும், சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்ற பரிசில் வழங்கும் நிகழ்வும் 2ஆம்திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு பரு.சிவன்கோவில் பர்வதவர்த்தனி கலாமண்டபத்தில் பரு. பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பரு.மேலதிக மாவட்ட நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா, சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை காணிப்பதிவாளரும் மேலதிக மாவட்டப் பதிவாளருமான திருமதி சரஸ்வதி தியாகராஜன், வடமராட்சி கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.சுந்தரமூர்த்தி, கௌரவ விருந்தினராக பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் கி.விக்னேஸ்வரமூர்த்தி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் கலைநிகழ்ச்சிகளாக *காவடி நடனம்* -கதிரவேற்பிள்ளை முன்பள்ளிமாணவர்கள்.

*கும்மி நடனம்*- கற்கோவளம் முன்பள்ளி மாணவர்கள்.

*மீனவநடனம்*-வல்வெட்டித்துறை கற்கோவளம் முன்பள்ளி.

*குழுஇசை*-ஹாட்லிக்கல்லூரி

*தனிநடனம்*-வட இந்துமகளிர் கல்லூரி

*வில்லுப்பாட்டு*-கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை.

"இனி எல்லாம் சரி" நாடகம்-பரு. சித்திவிநாயகர் வித்தியாசாலை ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும். அத்துடன் சிறுவர் தினம் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும் இடம்பெறும்.

சர்வதேச சிறுவர் தினப் போட்டிகளில் முதல் 5 இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

**ஆரம்பப்பிரிவு- பேச்சு**

சி.அன்ரன்சியோஷன் -கலட்டி றோ.க. ஆ.பாடசாலை, சி.கோசலா-திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம், சி.சிந்துஜா-திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம், சு.ஆதீஷன் - புற்றளைமகாவித்தியலயம், செ.அனோஜ் - வல்வை மகளிர் மகா வித்தியாலயம்.

**கட்டுரை**

பி.சர்மினி- சித்திவிநாயகர் வித்தியாலயம், இ.ஹர்சிகா-தட்டாதெரு மெ.மி.த.க.பாடசாலை, ச.மதுசுஜா-கெருடாவில் இ.த.க.பாடசாலை, செ.தர்சிகா- துன்னாலை மேற்கு மெ.மி.த.க. பாடசாலை, ஜெ.நிதுஷா-திக்கம் சித்திவிநாயகர் வித்தி யாலயம்.

**கீழ்ப்பிரிவு -பேச்சு**

மு.வெண்ணிலா-வட இந்து மகளிர் கல்லூரி, இ.ஜலனி- மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, க.பிரசாந்தி-மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, றொ.விதுர்சன்-கலட்டி றோ.க. ஆ.பாடசாலை, வி.ரஜீவன்-பரு.சித்திவிநாயகர் வித்தியாலயம், ஜெ.பிரியங்கா-தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்

**கட்டுரை**

கோ.மயூரி-மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, க.ஆர்த்திகா- மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, த.சானுசன்-ஹாட்லிக்கல்லூரி, க.கருணரூபன்-சிதம்பராக்கல்லூரி, ச.விதுர்சன்-தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம், ச.துஷியா-புலோலி மெ.மி.த. க.பாடசாலை.

**மத்தியபிரிவு-பேச்சு**

பு.ஆரணி-மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, அ.அருள்நிலா-வட இந்துமகளிர் கல்லூரி, அ.கஜேந்தினி-தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியால யம், மு. இந்துஜா-பரு.சித்திவிநாயகர் வித்தியாலயம், சி.கீர்த்திகா-கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை.

**கட்டுரை**

ச.அஜந்தா-வல்வை மகளிர் மகாவித்தியாலயம், மூ.உசாராணி- பொலிகண்டி இ.த.க.பாடசாலை, சி.சிவனந்தினி-மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, செ.சாருண்ஜா- மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, சீ.லாவண்யா-வட.இந்துமகளிர் கல்லூரி.

**கவிதை**

ப.வினோதா-மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, கு.தமிழ்மதி-மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, ம.மேரிதர்சிகா-சென்தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை. தே.பாமினி-கொற்றாவத்தை அ.மி.த. பாடசாலை, ந.வினித்தா-தும்பளை சிவப்பிரகாசம் மகாவித்தி,

**மேற்பிரிவு -பேச்சு**

க.சிவசுதன்-ஹாட்லிக்கல்லூரி, ஆ.சுமன்-சிதம்பராக்கல்லூரி, தே.ஜனனி-மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, செ.கபிலன்-ஹாட்லிக்கல்லூரி, பா.யாழினி-வட. இந்து மகளிர் கல்லூரி

**கட்டுரை**

பெ.கலைவாணி-வல்வை மகளிர் மாகாவித்தியாலயம், க.அனுஷா-வட இந்துமகளிர் கல்லூரி, சி.கவிதா-வட இந்துமகளிர் கல்லூரி, த.அனுஜா-சிதம்பராக்கல்லூரி, வே.சாளினி-மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

**கவிதை**

மோ.விஜித்தினி-மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, கே.நித்தியா-மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, க.மாலினி-வட இந்து மகளிர் கல்லூரி, இ.ரமேஸ்-வேலாயுதம் மகாவித்தியாலயம், ச.கஜீகரன் -ஹாட்லிக்கல்லூரி.

(ஓ-17)



அண்மையில் நெல்லியடி ஹற்றன் நஷனல் வங்கியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண சேவாச் சிரம சுவாமி சித்ரூபானந்தா "ஆளுமை விருத்தி" தொடர்பாக கருத்துரை வழங்குவதை படத்தில் காணலாம்.

## இராசி பலன்

30.09.2008
(புரட்டாதி 14, செவ்வாய்க்கிழமை)
அத்தம் முற்பகல் 10.39மணிவரை
பிரதமை பிற்பகல் 02.05மணிவரை
இராகுகாலம்-03.02-4.32 மணிவரை
சுபநேரம்-10.32-12.02 மணிவரை
நவராத்திரி விரதாரம்பம்

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தனவருவாய், உடல் நலம், சத்துரு ஜெயம் |
| இடபம் | தாழந்த சுபாவம், வியாபார நன்மை, சொத்துப் பிணக்கு. முயற்சி தாமதம் |
| மிதுனம் | ரோக நிலை, சுப செலவு, கல்வியில் ஆர்வம், நல்லமுயற்சி |
| கடகம் | அன்னியர் சந்திப்பு, சகோதரர் உதவி, பொருள் சேர்க்கை, சுப நிகழ்வு |
| சிங்கம் | மனோ சங்கடம், அதிக செலவு, வேலைச்சுமை, ரோக நிலை |
| கன்னி | ஜனவசியம், நல்ல முயற்சி, போசன சுகம், பெரியோர் உதவி |
| துலாம் | மனச்சோர்வு, காரிய அலைச்சல், சுப செலவு, சயனசுகக் குறைவு |
| விருச்சிகம் | தொழில்சிந்தை, மனமகிழ்ச்சி, முயற்சிகைகூடும், பொருள் சேர்க்கை |
| தனுசு | உற்சாகம், சுப செலவு, மேன்மையடைதல், நண்பர்கள் உதவி |
| மகரம் | அச்சமான நிலை, பிரயாணம், தொழில் நன்மை, புதிய திட்டமிடல் |
| கும்பம் | நிலை மாற்றம், வீண்பகை, உடல் நலக் குறைவு, முயற்சி தாமதம் |
| மீனம் | நண்பர்கள் சந்திப்பு, காரிய நன்மை, பொருள் சேர்க்கை, விருந்துபசாரம் |

வளவன்

## செஞ்சொல் ஞானவாரிதி

(யாழ்ப்பாணம்)

கந்தமடம் - மணல்தரை வீதி ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகம் மற்றும் அதனையொட்டி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெற்ற மண்டலாபிஷேக நிகழ்வுகளில் தெய்வீக தொடர் சொற்பொழிவாற்றிய மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் தேவஸ்தான பரிபாலன சபையால் "செஞ்சொல் ஞானவாரிதி" எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (அ)

## இலவச தேவாரப் பண்ணிசை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரால் எதிர்வரும் 9ஆம்திகதி வியாழக் கிழமை விஜயதசமி தினத்தன்று யாழ்.நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் மன்றத் தலைவர் வ.பேரின்பநாயகம் தலைமையில், முத்தமிழரசி செல்வி புஷ்பா செல்வநாயகத்தின் அனுசரணையுடன் இலவச தேவாரப் பண்ணிசை வகுப்பு ஆரம்பமாக உள்ளது.

துறைசை ஆதீன திருமுறைத் தோன்றல் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் இவ் வகுப்புக்களை நடாத்தவுள்ளார்.

பயிற்சிபெற விரும்பும் மாணவர்கள் தாங்கள் கல்வி கற்கும் பாடசாலை அதிபரிடம் பதிவினை மேற்கொண்டு பண்ணிசை வகுப்பு ஆரம்பமாகும் விஜயதசமி தினத்தன்று காலை 11 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்திற்கு வருகை தருமாறு திருமுறை மன்றம் அறிவித்துள்ளது. வகுப்புக்கள் தொடர்ந்து வார இறுதி நாட்களில் பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெறும்.

இப் பயிற்சி வகுப்பில் வயதெல்லையின்றி ஆண், பெண் இருப்பாலாரும் பங்கு கொள்ளலாம்.

இவ் வகுப்புகள் பற்றிய மேலதிக தகவல்களை மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தியிடம் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களை தெரிந்துகொள்ளலாம். (ஓ)

## சிறார்களுக்கு பசுப்பால்

(மருதங்கேணி)

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நாளை மறுநாள் வியாழக் கிழமை சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலய சிறார்களுக்கு பசுப்பால் வழங்க உள்ளது.

இப் பணியை வித்தியாலய அதிபர் திருமதி சுதாமதி தயாபரன் காலை 9.30மணிக்கு ஆரம்பித்து வைப்பார் என பரு.சுகாதார சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா அறிவித்துள்ளார். (ஓ)

## சிறுவர் தினமும் வாணி விழாவும்

(மானிப்பாய்)

மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆரம்பப் பிரிவின் சிறுவர் தினமும் வாணி விழாவும் நாளை புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் செல்வி பு. கிருஷாந்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி லயன் சோ. சுந்தரராஜன், சிறப்பு விருந்தினராக ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி ரூபா. உதயரத்தினம், கௌரவ விருந்தினராக வைத்திய கலாநிதி ப. பேரானந்தம் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர். (ஓ)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட அரியாலை பிரதேச வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (A.R.V) இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணி முதல் 12 மணிவரை நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 2மணி முதல் 3.30 மணிவரை அரியாலை திருமகள் சனசமூக நிலையத்திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம. மரியதாசன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

# பேராசிரியர் சண்முகதாசுக்கு சாஹித்ய ரத்னா விருது



(யாழ்ப்பாணம்)

அரச சாஹித்ய விழா, விருது வழங்கும் வைபவம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் மாத்தளை கம்புறுப்பிட்டி நாரந்தெனிய மத்திய மகா வித்தியாலயத் தில் நடைபெற்றது. 2008 ஆம் ஆண்டுக் கான இலக்கிய விருதினை எட்டுத் தமிழ் நூல்கள் பெற்றுக்கொண்டன. இவ்வாண்டுக் கான ''சாஹித்ய ரத்னா'' விருது பேராசிரியர் அ.சண்முகதாசுக்கு வழங்கப் பட்டது.

கவிதை நூலுக்கான பரிசை ''குறிஞ்சி தென்னவன் கவிதைகள்'', என்ற நூலும் திமிலை துமிலனின் கவிதைகள் நூலும் சிறுகதைக்கான விருதை "விரால் மீன்கள்" என்ற நூலும் பெற்றன. பொதி என்ற நாடக நூல், ''மரம்வெட்டியும் ஒரு தேவதையும்'' என்றசிறுவர்நூல், "ஈழத்து நவீன கவிதை" என்ற ஆய்வுநூல் ஆகியவையும் விருது பெற்றன.

மொழிபெயர்ப்பிற்காக ''ஒரேயுத்தம்'' நூலும், ''உழைப்பால் உயர்ந்தவர்கள்'' நூலும் பெற்றன. முறையே சாரல் நாடன், திமிலைத் துமிலன்,எம்.எஸ் அமானுல்லா, நிக்கோருக்ஷன், ஓ.கே.குணநாதன், செ. யோகராசா, திக்வெல்லை ஸப்வான், இரா. சடகோபன் ஆகியோர் விருதுபெற்றனர்.

தேர்வுக் குழுவில் பேரா. அருணாசலம், கலாநிதி.எஸ்.ரவீந்திரன், எழுத்தாளர் அந்தனி ஜீவா, எஸ்.நல்லையா, கலாநிதி எஸ். மனோகரன், கலாநிதி வ.மகேஸ்வரன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

றோ. சண்முகதாஸ் தமிழ்ப் பண்பாடு தொடர்பில் 50க்கு மேற்பட்ட கட்டுரைகளையும் மொழியியல், தமிழ்ப்புனைகதைகள் உட்பட தமிழை வளப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டவர். (அ)




# விலங்கு விசர் நோய் தொடர்பான நலத்துறைச் செய்திகள்-நாள் 3

**மனிதரில் விலங்கு விசர் நோய் அறிகுறிகள்**

- அதிக காய்ச்சல், வியர்வை
- கண்களை மூடமுடியாத நிலை
- அதிகரித்த உமிழ்நீர் வெளியேற்றம்
- மூச்சுத் திணறல்
- காற்றை எதிர்கொள்ள முடியாத நிலை
- நீரை விழுங்க முடியாத நிலை
- தொடர்பற்ற செயற்பாடுகள்
- கோபமடைதல்
- தொண்டைப்பகுதி இறுக்கமடைதல்
- நரம்புத்தொகுதி செயலிழப்பதால் உறுப்புகளின் செயற்பாடு பாதிக்கப்பட்டு இறுதியில் மரணம் சம்பவிக்கும்.

**நாயில் விலங்கு விசர் நோய் அறிகுறிகள்**

- கோபமடைந்த நிலையில் காணப்படும்
- கண்ணில் தெரியும் பொருட்களை கடிக்கும்
- நீரை விழுங்க முடியாத நிலை
- அதிகரித்த உமிழ்நீர்ச் சுரப்பு
- அசாதாரணமாக ஊளையிடல்
- திடீரெனக் கடித்தல்
- சுய கட்டுப்பாடற்ற செயற்பாடுகள்
- அசாதாரண நடவடிக்கைகள் (ஓ)

# "சிவநெறி" நூல் வெளியீட்டு விழா

(பருத்தித்துறை)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக சைவ ஆலோசனைச் சபையினரின் "சிவநெறி" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் சைவ ஆலோசனைச் சபைத் தலைவர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தைச் சேர்ந்த செல்வி. தயானி தர்மலிங்கத்தின் இறைவணக்கத்தையடுத்து வடமராட்சி தெற்கு மேற்கு உதவிப் பிரதேச செயலர் எஸ் .சிவஸ்ரீயின் வரவேற்புரை இடம்பெறும். பிரம்மஸ்ரீ தே.தெய்வேந்திரக் குருக்கள் ஆசி வழங்குவார்.

யாழ். அரச அதிபர். கே. கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைப்பார். வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா "சிவநெறி" யின் முதற் பிரதியைப் பெற்றுக் கொள்வார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறைத் தலைவர் கலாநிதி. எம்.வேதநாதன், யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்துநாகரீகத் துறை முதுநிலை விரிவுரையாளர்.திருமதி. நாச்சியார் செல்வநாயகம் வெளியீட்டுரை நிகழ்த்துவார். வல்வை சிவகுரு வித்தியாலய அதிபர் ஏ. சிவநாதன் ஏற்புரை நிகழ்த்துவார். கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். ரூபகுமார் நன்றியுரை நிகழ்த்துவார் . (அ-52)

## சிங்கள பாடநெறிகளுக்கான மீள் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் சிங்கள பாடநெறிகளுக்கான (ஆரம்பப் பாட நெறி,அடிப்படை கற்கைநெறி) முதலாவது மீள் பரீட்சை நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்வியங்காடு யா/ செங்குந்தா இந்துக்கல்லூரியில் நடைபெறும். இப் பரீட்சைக்கு அனைத்து மாணவர்களையும் பங்குபற்றுமாறு இணைப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

## நவராத்திரி உற்சவம்

நவராத்திரியை முன்னிட்டு கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் தினமும் காலை 8 மணி முதல் அம்பாளுக்கு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விஷேட பூசைகளும், மாலை 5மணி முதல் கொலுப் பூசைகளும், ஒன்பதாம் நாள் மாலை மகிஷாசுரன் போரும், விஜயதசமியன்று மாலை மானம்பூ உற்சவமும் நடைபெறும். (இ)

## மஹோற்சவம்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பித்து தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். (இ-36)

## மாகாண மெய்வன்மை போட்டிகளில் இரு இடங்கள்



யா/கச்சாய் அ.த.க. பாடசாலை மாணவி செல்வி சீ. செல்வராஜி அண்மையில் நடைபெற்ற வடக்கு மாகாண மெய்வன்மைப் போட்டிகளில் 17 வயதுப் பெண்கள் பிரிவில் 1500 மீ., 800மீ. ஓட்டப் போட்டிகளில் முறையே வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வென்று பெருமை சேர்த்துள்ளார். (இ)

## போதைப்பொருள் தடுப்பு ஆக்கதிறன் போட்டியில் 2ஆம் இடம்



நாடளாவிய ரீதியில் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் நடைபெற்ற போதைப்பொருள் தடுத்தல் கவிதை ஆக்கத்திறன் போட்டியில் கனிஸ்ட பிரிவில் யா/கச்சாய் அ.த.க. பர்டசாலை மாணவி செல்வி வி.ரோகினி இரண்டாம் இடம்பெற்றுள்ளார். இவருக்குரிய பணப்பரிசும் சான்றிதழும் ஒக்டோபர் 3ஆம் திகதி கல்வி அமைச்சில் நடைபெற உள்ள பரிசில் வழங்கும் நிகழ்வில் வழங்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## கணனிப் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் சண்டிலிப்பாய் பிரிவினால் கணனிப்பயிற்சி நடத்தப்படவுள்ளது.

பயிற்சி பெற விரும்புவோர் பழைய பொலிஸ் நிலையம், ஆனைக்கோட்டை என்னும் முகவரியிலுள்ள பிரிவு அலுவலகத்தில் 5ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை பெற்று பூரணப்படுத்தி இம்மாதம் 10ஆம் திகதிக்கு முன் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பிரிவுக் காரியலாயத்துடன் அல்லது 021 222 2886 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம் என இலங்கை செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய் பிரிவு செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ)




சாவகச்சேரி வடக்கு ஆதிசிவ வீரபத்திரர் ஆலய மஹோற்சவ விழாவில் ஆலய குரு சிவஸ்ரீ வீரபத்திரக்குருக்கள் கற்பூர தீபம் ஏற்றுவதையும், பெருமான் சப்பறத்தில் வீதியுலா வருவதையும் படங்களில் காணலாம்.

# நோத்முதல் கோபல்லவா வரை (113)

### பொறுப்பில்லாத சட்டசபை

ஆள்பதி மனிங் அவர்களால் முதலில் திருத்தப்பட்ட சட்டசபையின் பிரதிநிதிகள் கூட்டம் 1921 ஆம்ஆண்டு யூன் மாதம் 7ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் திறந்து வைத்துப் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசித் தலைமை தாங்கிய ஆள்பதி அவர்கள் மாகாணந்தோறும் பிரதிநிதிகள் தெரியப்பட்டுச் சபையை அலங்கரித்தமை மகிழ்ச்சிக்குரிய காரியம் என்றும், பொறுப்பு வாய்ந்த அப் பிரதிநிதிகள் பொதுமக்களின் நன்மையையும் இலங்கையின் சுபீட்சமான எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு அரிதில் உழைத்துக் கடமை செய்வதற்குச் சந்தர்ப்பங் கிடைத்துள்ளது என்றும் கூறினார். இலங்கையின் நிதி நிலைமை உலக நாடுகளைப் போல மகாயுத்தத்தின் பின் நன்றாக இல்லை என்றும், இலங்கையின் வருமானம் 60 மில்லியன் ரூபாவாக இருந்த போதிலும் அதன் கொள்வனவு விலை 40 மில்லியன் ரூபா என்றே மதிப்பிடல் வேண்டும் என்றும், நிதி நிலைமையை மேற்பார்வை செய்ய ஒரு நிதிக்குழு நியமிக்கப்படும் என்றும் கூறினார். திரு. பொன்னம்பலம் இராமநாதனவர்கள் பொது மக்களுக்காற்றிய அளப்பரிய சேவையை அறிந்தின்புற்ற மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் அவருக்கு நைற் பட்டம் வழங்கிக் கௌரவித்தமை சால மகிழ்ச்சிக்குரிய காரியம் என்றும் கூறினார்.

சேர் இராமநாதன் அவர்கள் 1921 ஆம் ஆண்டிற் கூடிய சட்ட சபையிலே கௌரவ நியமன அங்கத்தவராயே இருந்தார்கள். ஆனால் அவர் சட்டசபையிற்றிருத்தங்

**மீன் பார்வை**

கோரிப் பேசிய பேச்சு இலங்கையின் வரலாற்றுப் பிரசித்தி பெற்றமையாகும். அவர் தாம் 1879 ஆம் ஆண்டிற் சட்டசபையிற் பிரவேசித்த காலத்தில் அங்கே விவேகிகளான ஆங்கிலேயர் பலர் அங்கத்தவராய் இருந்த போதிலும், அவர்கள் ஆள்பதி அவர்களின் எண்ணத்தையும் ஏவலையும் செய்து நிறைவேற்றும் யந்திரங்களாயே இருந்தார்கள் என்று குறிப்பிட்டார்.

பின்னர் 1910 ஆம் ஆண்டில் ஏற்பட்ட திருத்தத்தின் விளைவாக உத்தியோக அங்கத்தவர் 12 பேரும், உத்தியோகப் பற்றற்றவர் 10பேரும் இடம்பெற்றமையால் ஏற்பட்ட அரசுவலுச் சமநிலையால் உத்தியோக அங்கத்தவர் பிரித்தானிய பேரரசின் நலனுக்காக உழைக்கக் கூடியதாக இருந்தார்கள் என்றார். இத் திருத்தத்தை அனுமதித்த குடியேற்ற மந்திரியார் குறூவ் பிரபுவின் நோக்கமும் அஃதேயென்றார்.

மேலும் 1910 ஆம் ஆண்டின் பின் இலங்கையிலிருந்து ஐந்து சங்கங்கள் சீர்திருத்தங்கோரி நினைவேடுகள் சமர்ப்பித்த போதிலும், குறூவ் பிரபு அவர்கள் இலங்கையருக்குப் பரந்த முறையில் வாக்குரிமை கொடுக்கப் பலமுறை மறுத்துவிட்டார் என்றார்.

சேர் இராமநாதன் 9.12.1921 இல் சீர்திருத்தங் கோரிப் பேசிய போது இலங்கைச் சட்டசபையில் குறைந்தது 45 பிரதிநிதிகளாவது இருத்தல் வேண்டும் என்றும், அன்றைய குடிசனத்தொகை 4இலட்சத்து 50 ஆயிரம் என்றும் ஒரு இலட்சம் மக்களுக்கு ஒரு பிரதிநிதியாவது இருக்கவேண்டாமோ என்றும் கேட்டார்.மேலும் அவர் இலங்கையின் குடிசனத் தொகையில் அக்காலத்தின் மாகாண ரீதியில் இருந்த வாக்காளர் தொகையையும் புள்ளிவிபரத்தோடு காட்டிப் பேசினார்.

| | | |
|---|---|---|
| 1.மேல்மாகாணம் | -20800 | வாக்காளர்கள் |
| 2.வடமாகாணம் | -14000 | ,, |
| 3.தென்மாகாணம் | -7700 | ,, |
| 4.வடமேல்மாகாணம் | -4820 | ,, |
| 5.மத்திய மாகாணம் | -2430 | ,, |
| 6.சப்பிரகமுவா மாகாணம் | -1345 | ,, |
| 7.கீழ் மாகாணம் | -810 | ,, |
| 8.ஊவா மாகாணம் | -600 | ,, |
| 9.வடமத்திய மாகாணம் | -385 | ,, |
| மொத்தம் | -52890 | ,, |

உத்தேச சட்டசபையில் உள்ள 45 பிரதிநிதிகளுள், சிங்களவர் 20பேரும் தமிழர் 10பேரும், 15பேர் ஏனைய சமூகத்தினருக்கும் பிரதிநிதிகளாகலாம் என அவர் கருதினார்.



சேர் இராமநாதன் அவர்கள் திருத்தங் கோரியதைப் பின்பற்றித் தேசிய மகாசபையினர் சிறுபான்மை ஐக்கிய முன்னணியினர், இலங்கை ஐரோப்பியர் சபையினர், கொழும்புத் தமிழர்சபையினர், யாழ்ப்பாண மகாசபையினர், யாழ்ப்பாணச் சங்கத்தார், பறங்கியர் சங்கத்தார், சிலாபச் சங்கத்தார் ஆகியோர் திருத்தங் கோரினர். அவர்களுள் தேசிய மகா சபையினரும், சிறுபான்மை முன்னணி யினரும் தாங்கள் தயாரித்த அரசியல் திருத்த நினைவேடுகளையும் சமர்ப்பித்தார்கள்.

**க.சி.குலரத்தினம்**

முன்னர் இலங்கை முழுவதற்கும் இராமநாதன் அவர்கள் ஏகப்பிரதிநிதியாய் இருந்த இடத்தில் இப்போது பதினொரு பிரதிநிதிகள் மாகாணந்தோறும் பிரதிநிதித் துவம் பெற்று வந்திருந்தனர். அவர்கள் பிரதிநிதித்துவம் வகித்த தேர்தல் தொகுதிகளையும் அவர்கள் பெயர்களையும் அறிந்திருத்தல் ஈண்டுப் பொருத்தமான தாகும். (தொடரும்)







சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அண்மையில் நடைபெற்ற "தாய்ப்பாலூட்டல் வார"க் கொண்டாட்டத்தில் தாய்மார் சார்பில் திருமதி த.சுபோதினி தலைமை தாங்குவதனையும், பிரதம விருந்தினரான சுகாதார வைத்திய அதிகாரி இ.பரமேஸ்வரன் உரையாற்றுவதனையும், மேற்பார்வை குடும்ப நல உத்தியோகத்தர்கள் ரி.பரமேஸ்வரி, எஸ்.புவனேஸ்வரி ஆகியோர் அமர்ந்திருப்பதையும், அங்கு நடைபெற்ற கலைநிகழ்வில் ஒரு காட்சியையும், கலந்துகொண்டவர்களில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

# எமது பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்கள்

# சமூக ஒற்றுமையை உருவாக்க உதவவேண்டும் (2)



1000 ஆண்டுகளுக்கு முன்னர் தென்மராட்சியில் உள்ள மட்டுவில் கிராமத்தின் மீது சோழர் படையெடுத்து வந்து அங்கிருந்த யானைகளைச் சிறைப் பிடித்ததாக சோழர் கால ஆவணங்கள் கூறுகின்றன. இற்றைக்கு 700 ஆண்டுகளுக்கு முந்திய சிங்கள இலக்கியங்கள் சவகிரி என்ற இடத்தை அதாவது சாவகச்சேரியை தமிழரின் முக்கிய நிர்வாக மாவட்டமாகக் குறிப்பிடுகின்றன. யாழ்ப்பாண அரசு பற்றிக் கூறும் தமிழ் இலக்கியங்கள் தென்மராட்சியில் முகமாலை, எழுதுமட்டுவாள், உசன் ஆகிய இடங்களில் குடியிருந்த முஸ்லிம் மக்களே யாழ்ப்பாண அரசு காலத்தில் நல்லூரில் வந்து குடியேறியதாகக் குறிப்பிடுகின்றன.

ஈழத்து பூர்விக இந்து ஆலயங்கள் பற்றிக் கூறும் தஷ்ண கைலாயபுராணத்தில் யாழ்ப்பாணத்தின் பழமை வாய்ந்த ஆலயங்களில் ஒன்றாகச் சாவகச்சேரியில் வாரிவானேஸ்வரர் ஆலயத்தைக் குறிப்பிடுகின்றது. இத்தகைய வரலாற்றுப் பெருமைக்குரிய தென்மராட்சியில்தான் பிற்காலத்தில் தமிழுக்கும், தமிழ் இலக்கியத்திற்கும், தமிழர் பண்பாட்டிற்கும் பெருமை சேர்த்த மட்டுவில் பண்டிதமணி கணபதிப்பிள்ளை, பொன்னம்பலபிள்ளை, மகாலிங்கசிவம், ம.கா. வேற்பிள்ளை போன்ற தமிழ் அறிஞர்களும் பிறந்துள்ளனர். தமிழர்களிடையே நாட்டுக் கூத்தை வளர்த்த அண்ணாவிமாரும், நாடகக் கலைஞர்களும், நாதஸ்வர வித்துவான்களும், நட்டுவாங்க கலைஞர்களும் வாழ்ந்தவர்கள் என்ற பெருமையும் தென்மராட்சிக்கு உண்டு. இப் பின்புலம் தான் இன்று உயர் கல்வி பெறுவதிலும் தென்மராட்சி மாணவர்கள் முன்னோக்கி வளர்ந்து வரக் காரணம் எனக் கருதுகிறேன். இவற்றையெல்லாம் நான் இவ்விடத்தில் குறிப்பிடுவதற்கு முக்கிய காரணம் இன்று கொண்டாடப்படும் கலாசார நிகழ்வில் வெளிப்படுத்தி நிற்கும் பண்பாட்டு அடையாளங்களை நாம் சமகாலப் படைப்பாக மட்டும் எடுத்துக் கொள்ளக்கூடாது.

எமது மக்களுக்கு இப்பிரதேச மண்ணோடொட்டிய நீண்ட பாரம்பரிய வரலாற்றோடு வைத்துப் பார்க்கும் போது இங்கு வெளிப்படுத்தப்படும் பாரம்பரிய கலை வடிவங்கள் இப் பிரதேசத்தின் தனித்துவமான அடையாளங்களாகக் காணப்படுகின்றன. அவற்றை எம்மக்கள் குறிப்பாக நம் இளைஞர்கள் தெரிந்து கொள்வதும், தெரிந்துகொள்ள முற்படுவதும் இன்றைய காலகட்டத்தில் மிகவும் முக்கியமாகும்.

### எமது கலாசாரம் எது?

கலாசாரம் என்ற சொல்லை உச்சரிக்கும் போது எமக்கு முதலில் தெரிவது இலக்கியமும், இலக்கியம் சார்ந்த படைப்புக்களுமாகும். ஆனால் இலக்கியம் சார்ந்த மரபுகளை மட்டும் தக்கவைத்துக் கொள்வதல்ல கலாசாரம். இலக்கியம் கலாசாரத்தில் ஒரு அங்கம் மட்டுமே. அது எமது பழக்கவழக்கங்களை, வாழ்கை முறையை, மரபுகளை, மத நம்பிக்கைகளை, வரலாற்றை, சமூக உறவுகளை, பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களை ஒன்றுசேர அழகாக வெளிப்படுத்துவதன் மூலம் கலாசாரத்தின் குறிகாட்டியாகத் திகழ்கிறது.

ஆனால் கலாசாரம் என்ற சொல்லுக்குள் பல விழுமியங்கள் உள்ளடக்கப்படுகின்றன. அது குறிப்பிட்ட ஒரு சமூகத்தின் முழுமையான ஆளுமையை வளர்க்கின்ற மதம், கலை, ஒழுக்கம், வாழ்கை முறை, பாரம்பரிய பழக்கவழக்கங்கள், மரபுகள், சமூக, குடும்ப உறவுகள், நம்மைப் பற்றியும், பிறரைப் பற்றியும் சமூகம் கொண்டுள்ள சிந்தனை முதலான பண்பாட்டு விழுமியங்களின் கூட்டமைப்பாகும். ஒரு சமூகம் எப்போது தமது கலாசார தனித்துவத்தை அல்லது பண்பாட்டுத் தனித்துவத்தை இழக்கின்றதோ அப்போது அச் சமூகம் பல விபரீத விளைவுகளைச் சந்திக்க நேரிடுகிறது. அதாவது அச் சமூகம் வன்செயல்கள், விபரீத செயல்கள் போன்றவற்றுக்கு உட்படுவதுடன், அச் சமூகத்தில் மனிதநேயம், பிறரை மதிக்கும் பண்பு, பிறர் துன்பத்தில் பங்கெடுக்கும் பண்பு முதுலானவையும் சீரழிந்து போகும். இவற்றை அனுபவரீதியாகக் கற்ற பாரதி தாசன் தன் கவிதை ஒன்றில் "*பிறர் செய்த நன்றியை மறக்காதே நம்நாட்டின் பண்பாட்டை துறக்காதே*" எனக் குறிப்பிடுகிறார். ஆகவே இன்றைய நிகழ்வில் முன்னிலைப்படுத்தும் நம் பிரதேச பண்பாட்டு விழுமியங்கள் எதிர்காலத்தில் மகிழ்ச்சியும், கௌரவமும் மிக்க அமைதியான, சுபீட்சமான, ஒற்றுமை நிறைந்த வாழ்வை முன்னெடுத்துச் செல்வதாக அமைய வேண்டும் என விரும்புகிறேன். பல பிரச்சினைகளுக்கு அன்பு நிறைந்த உரையாடல் ஒரு தீர்வாக இருக்கும் என்பது எமது பாரம்பரிய பண்பாட்டின் ஒரு அடையாளமாகும். இக் கருத்து தற்காலத்திலும் வலியுறுத்தப்படுகிறது. ஆனால் இக் கருத்தை நாம் புதிதாக உருவாக்க முடியாது. இன்னொரு நாட்டில் இருந்து உடனடியாகக் கற்று நமக்குள் திணிக்கமுடியாது. ஆனால் எமது பண்பாட்டுடன் இணைந்திருக்கும் அதற்கும் நாம் மீண்டும் புத்துயிர் அளிக்க முடியும்.

பேராசிரியர் க.கந்தசாமி
பௌதீகவியல் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சமகாலத்தில் நாம் எமக்குரிய பண்பாட்டு அடையாளங்கள், தனித்துவங்கள் எவை எனத் தெரிந்துகொள்ளாமலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உலகத் தொலைக் காட்சிகளிலும், வெகுசனத் தொடர்புச் சாதனங்களிலும் பார்ப்பதையும், கேட்பதையும் எமது சொந்த வாழ்க்கையில் நடைமுறைப் படுத்துகிறோம் அல்லது நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறோம். இது எமது சமூகத்திற்கு மட்டும் உரிய குறைபாடுகள் அல்ல.இவை உலகமயமாக்கலுக்குப் பின்னர் வளர்முக நாடுகள் பலவற்றில் தோன்றியிருதக்கும் மிகப் பெரிய குறைபாடாகும். (தொடரும்)

# அமெரிக்காவின் பொருளாதார சிக்கலைத் தீர்த்துவைக்க இந்தியா உள்ளிட்ட வளரும்நாடுகளின் உதவி தேவை

## பிரிட்டன் பிரதமர் கோர்டன் பிறவுண் தெரிவிப்பு

(லண்டன்)



அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கலைத் தீர்க்க ஜி-8 நாடுகளின் உதவி மட்டும் போதாது. இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகளின் உதவியும் அவசியம் என பிரிட்டன் பிரதமர் கோர்டன் பிறவுண் கூறினார்.

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள நிதி நெருக் கடியால் முக்கிய வங்கிகள் திவாலா கியுள்ளன.

பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க அமெரிக்கா தீவிர முயற்சி மேற்கொண்டுள் ளது.

உலக அளவில் மிகச் சிறந்த பொருளாதார நிபுணர்களில் ஒருவரான இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குடன் இது குறித்து அமெரிக்க அதிபர் புஷ் ஆலோசனை நடத் தியுள்ளார்.

ஐ.நா. சபை பொது குழுக்கூட்டத்தில் பங் கேற்கச் சென்ற உலக நாடுகளின் தலைவர் களும் இந்தப்பிரச்சினை குறித்து விவாதித் தனர்.

பிரதமர் மன்மோகன் சிங் இது பற்றி பேசும் போது நிதிப்பிரச்சினையை சமாளிக்க சர்வதேச அளவிலான புதிய முயற்சிகளை உடனடியாக தொடங்க வேண்டும்.

இந்தப்பிரச்சினையைத் தீர்க்க பிரிட்டன் உள்ளிட்ட மற்ற நாடுகளின் நிபுணர்களுடன் ஆலோசனை நடத்துவது மகிழ்ச்சி தருகிறது என்றார்.

பிரிட்டன் பிரதமர் கோர்டன் பிறவுண் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்காக மன்மோகன்சிங் கூறிய கருத்துக்களுக்கு ஆதரவு தெரிவிக்கிறேன்.

இந்தப்பிரச்சினையை சமாளிக்க ஜி-8 நாடுகளின் உதவி மட்டும் போதுமானதல்ல இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகளின் உதவியும் அவசியம் என்றார்.

(அ-6)

## பக்தாத்தில் தொடர் குண்டுவெடிப்பு 33 பேர் பலி; 85 பேர் காயம்


(பக்தாத்)

பக்தாத் நகரில் நடந்த தொடர் குண்டு வெடிப்பில் 33 பேர் பலியாயினர். 85 க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். நேற்று முன்தினம் மேற்கு பக்தாத் நகரின் அக்தார் தெருவில் உள்ள சந்தையில் நிறுத்தப்பட்டி ருந்த கார் ஒன்றில் திடீரென பயங்கர சத்தத் துடன் குண்டு வெடித்தது.

இதில் 12 பேர் உயிரிழந்தனர். 35க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இந்த குண்டு வெடிப்பு நடந்த சில நிமிடங்களி லேயே வீதியோரத்தில் கிடந்த ஒரு குண்டும் வெடித்து சிதறியது. அதில் ஒருவர் உயிரிழந்தார். அந்த பகுதியில் கடைகளை தீ பிடித்து எரிந் தது. இது போன்று மத்திய கராடா என்னும் இடத்தில் மற்றொரு காரில் இருந்த குண்டு வெடித்து சிதறியது. இதில் 19 பேர் உயிரி ழந்தனர். 72க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். நேற்று முன்தினம் நடந்த தொடர் குண்டு வெடிப்பில் மூன்று பொலி ஸார் உள்பட 33 பேர் பலியாயினர் 85க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். (அ-6)

## இயந்திர இறக்கை மூலம் ஆங்கில கால்வாயை 10 நிமிடங்களில் கடந்து உலக சாதனை

தனியொரு ஜெட் இயந்திரம் பொருத் தப்பட்ட இயந்திர இறக்கையைப் பயன்படுத்தி



ஆங்கிலக் கால்வாயைக் கடந்த உலகின் முதலாவது நபர் என்ற சாதனையை சுவிட் ஸர்லாந்தைச் சேர்ந்த யெவ்ஸ் ரோஸி படைத்துள்ளார்.

காலெய்ஸிலிருந்து டோவர் வரையான 22 மைல் பயணத்தை 10 நிமிடங்களுக்கும் குறைவான நேரத்தில் பூர்த்தி செய்து பராசூட் மூலம் அவர் தரையிறங்கினார்.

8200 அடி உயரத்தில் பறந்த விமானத் திலிருந்து குதித்த பின்னர் இயந்திர இறக்கை மூலம் யெவ்ஸ் ரோஸி பறந்தமை குறிப்பிடத் தக்கது.


முன்னாள் இராணுவ விமானியான அவர் மேற்படி சாதனையை மேற்கொள்ள ஏற்கனவே எடுத்துக் கொண்ட இரு முயற் சிகள் சீரற்ற காலநிலை காரணமாக பிற் போடப்பட்டன. (அ-6)

## உலக தரிசனம்

# விண்வெளிக்கு லிப்ட் பயணம் ஜப்பான் விஞ்ஞானிகள் அபாரம்

(டோக்கியோ)

விண்வெளிக்கு செல்லும் லிப்ட்டை உலகிலேயே முதல் முறையாகஜப்பான் விஞ் ஞானிகள் வடிவமைத்து வருகின்றனர்.



உலகம் முழுவதும் பல்வேறு துறை விஞ் ஞானிகளுக்கும் விண்வெளி குறித்து பல கனவுகள் உள்ளன. அதில் கற்பனைக்கு எட் டாத கனவாக விண் வெளிக்கு ஒரு லிப்ட் என் பது இருந்தது. அது நிறை வேறும் தருணம் வந்தள்ளது. ஜப்பான் விஞ்ஞானிகள் எளிதாக இதை விடிவமைத் துள்ளனர். பூமி யுடன் சேர்ந்து சுற்றும்செயற்கைக் கோள் ஒன்று விண்ணில் நிறுத்தப்படும்.

பூமியில் இருந்துமிக வலுவான அதே சமயம் பெரிதும் எடை குறைவான கேபிள் கள் செயற்கைக் கோளுடன் இணைக்கப் படும். பூமியில் இருந்து பெரிய லிப்ட் இயக் கப்படும் இதில் ஏராளமானோர் பயணம் செய் யலாம். சூரிய ஒளி ஜென ரேட்டர்களை எடுத் துச் செல்லலாம் கதிர்வீச்சு கழிவுப் பொருட் களை அடைத்து எடுத்துச் செல்லலாம் எத் தனை லிப்ட்கள் வேண்டுமானாலும் இயக்க லாம் புவியீர்ப்பு சக்தியை முறியடித்து லிப்டை இயக்குவது சிரமமான காரியம் அல்ல என்று ஜப் பான் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அதற்கு அதிக சக்தி தேவைப்படாது. இன் னும் சொல்லப்போனால் விண் கலத்தை ஏவு வதற்கு தேவைப்படும் சக்தியை விட 100 மடங்கு குறைவான சக்தி இருந்தால் போதும் வெளி நாடு செல்வது போல யார் வேண்டுமானா லும் லிப்ட் மூலம் விண்வெளிக்கு செல்ல முடி யும் என்று கூறினார் இத் திட்டத்தின் தலை வர் சுயுசி ஒனே. இந்த திட்டம் நாசா உள்ளிட்ட அரசு நிறுவனங்கள் உட்பட சர்வ தேச அள வில் பெரிதும் கவனத்தை ஈர்த்துள்ளது இதற் கானவடிவமைப்பை சிறப்பாக தயாரித்து அளித் தால் கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப் படும் என விண்வெளி லிப்ட் தொடர்பான ஆராய்ச்சி நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

(அ-6)

## சோமாலியா அருகே கடத்தப்பட்ட கப்பலை கண்காணிக்கிறது அமெரிக்க போர்க்கப்பல்

சோமாலியா அருகே கடத்தப்பட்ட உக் ரைன் நாட்டு கப்பலில் இருக்கின்ற டாங்கிகள் மற்றும் இதர ஆயுதங்கள் இறக்கப்படாமல் இருப்பதை கண்காணிக்க அமெரிக்க போர்க் கப்பல் ஒன்று அதனை கண் காணித்து வரு கின்றது.

மத்திய சோமாலியாவின்கடற்கரைக்கு அருகே கடத்திச் செல்லப்பட்டு மற்ற கடத்தப் பட்ட கப்பல்களுக்கு அருகில் நிறுத்தி வைக் கப்பட்டுள்ள உக்ரைன் நாட்டு கப்பல் தங்கள் கண் பார்வையில் இருப்பதாக அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது.

கென்ய இராணுவத்தினருக்கு இராணுவ பொருட்களை எடுத்து சென்றஇந்த கப்பலை கடத்தியவர்கள் கப்பலைவிடுவிக்கபெரும் பணத்தை கேட்கின்றனர்.

இந்தக் கப்பலில் இருக்கும் டாங்கிகள் இப் பகுதியின் ஸ்திரத்தன்மையை குலைத்து விடும் என சோமாலியாவில் பெருமளவி லான இராணுவ செயற்பாடுகளை கொண் டுள்ள எத்தியோப்பியா கவலை தெரிவித்துள் ளது. (அ-6)

## உலகின் மிகப் பழமையான பாறை கனடாவில் கண்டுபிடிப்பு

கனடாவின் ஹட்ஸன் பே கடற்கரையில் 4.28 பில்லியன் ஆண்டுகள் பழமையான உலகின் மிகவும் ஆதிகாலப் பாறைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

ஆதிகால உயிரினங்கள் தொடர்பான சான்றுகளையும் இப்பாறை கொண்டுள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.



இப்பாறைகளில் மிகவும் விசேடத்துவம் பொருந்திய இரசாயன கையெழுத்தொன்று காணப்பட்டது. இது மிக பழமையானதாகும்.

இத்தகைய பழைய கையெழுத்து உல கில் வேறெங்கும் கண்டுபிடிக்கப்பட வில்லை என மேற்படி கண்டுபிடிப்பை மேற்கொண்ட ஆய்வுக் குழுவில் பங்கேற்ற மொன்றியல் மக்கில் பல்கலைக்கழகத்தின் பூகர்ப்பவியல் பேராசிரியர் டொன் பிரான்சிஸ் தெரிவித்தார்.

இப்பாறையிலுள்ள இரசாயன சான்று களானது உலகம் எவ்வாறு தோன்றியது உலகில் உயிரினங்கள் எவ்வாறு தோற்றம் பெற்றன என்பன தொடர்பான பல மர்மங் களுக்கு தீர்வுகாண உதவக் கூடும் என எதிர் பார்க்கப்படுகிறது. (அ-6)

## பெரிய்ய்... ய புதிர்




(ராவன்ஸ்பெர்க்)

ஜெர்மனியில் புதிர் போட்டி தினம் கொண்டாடப்பட்டது.

உலகிலேயே மிகப் பெரிய புதிர் வடிவை உருவாக்கும் முயற்சியில் மக்கள் ஈடு பட்டுள்ளதை விமானத்தில் இருந்து எடுக்கப் பட்ட படம் இது.

இந்த பெரிய்ய்... ய புதிரில் சுமார் 10லட் சம் பாகங்கள் இடம் பெற்றிருந்தன ஊரே தெரியக்கூடிய விரிந்த போட்டோவில் எறும்பு போலமக்களுக்குஇடையேபெரிதாக தெரி கிறது புதிர் போட்டி. (அ-6)

## கனமான சாகசம்



(அர்ன்ஹெறம்)

ஹாலந்து நாட்டின் அர்ன்ஹெறம் பகுதி யில் மான்ஸ்டர் ஜாம் எவன்ட் என்ற பெயரில் நடந்த சாகசஓட்டுநர் நிகழ்ச்சியில் வரிசை யாக நிறுத்தப்பட்ட வாகனங்களைத் தாண்ட ஜீப்புடன் பாய்கிறார் (வெளியே தெரியாத ) ஒருவர்.

இந்த மான்ஸ்டர் ஜீப் 11 அடி உயரம் 12 அடி நீளம் கொண்டது. அத்துடன் 4 டன் எடை 4ஆயிரம் கிலோ வேறு !அதன் டயர்கள் மட்டுமே 5.5 அடி உயரம் .

இத்தனை கனமான ஜீப்பை செலுத்தி பல வாகனங்களை தாண்டுவது தான் போட்டி. (அ-6)

# இளநரைக்கு என்ன செய்யலாம்?

சிலருக்கு புருவத்தில் முடி இருக்காது. இவர்கள் விளக்கெண்ணெயை சூடு செய்து வட்டமாக ஒவ்வொரு புருவத்தையும் மசாஜ் செய்யவும் அல்லது அரோமாதெரபி எடுத்துக்கொண்டால் ஒரு மாதத்தில் பலன் தெரியும். ஆனால் இதை அழகு நிபுணரின் உதவி இல்லாமல் செய்யக்கூடாது. வீட்டிலேயே செய்தால் முறை தவறி தோல் எரிந்து விட வாய்ப்புக்கள் அதிகம்!

சிலருக்கு முடி கொட்டிக் கொட்டி நெற்றி பெரிதாகிக் கொண்டே போகிறது. இதற்கு என்ன செய்யலாம்? என தெரியாது தவிக்கின்றனர்.

இப்படி முடி கொட்டுவதற்கு உணவுப் பழக்கவழங்கங்கள், கல்சியம், புரோட்டீன்ஸ் பற்றாக்குறைதான் காரணம். உங்களுக்கொன்று தெரியுமா? நம் முடி கரோட்டின் எனும் புரோட்டீனால் ஆக்கப்பட்டது. இந்த கரோட்டின் எனும் புரோட்டினை நமது உடலே உருவாக்குகிறது. இந்த புரோட்டீன் பற்றாக்குறையாலும் இதுபோன்ற பிரச்சினை ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம். இந்த புரோட்டீனை கடையில் வாங்க முடியாது. பருப்பு, பால், முட்டை இதெல்லாம் நிறைய எடுத்துக் கொண்டால் சிறிது காலத்தில் நல்ல ரிசல்ட் கிடைக்கும். அதேபோல் தான் இந்த இளநரை பிரச்சினையும். இப்போது இளையவர்களுக்கு இந்த இளநரை அதிகமாக உள்ளது. இதற்கு என்ன செய்யலாம்?

இந்தப் பிரச்சினை பிகொம்ப்ளக்ஸ் குறைபாட்டால் தான் ஏற்படுகிறது. தவறான ஷாம்போ, அதிகமான பொடுகு, மன அழுத்தம், எதிர்பாராத மன அழுத்தம் காரணமாக பிகொம்ப்ளக்ஸை உடம்பு இழக்கிறது. இதன் காரணமாகவும் இளநரை வரும். நம் உடல் நிறத்தையும், முடி நிறத்தையும் நிர்மாணிக்கிறது. இளநரை ஏற்பட இதன் குறையும் ஒரு காரணம். இதைத் தவிர்க்க நெல்லிக்காய், வெந்தயம், பேரீச்சம்பழம், கீரை இவற்றை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளலாம். இதேபோல் தான் சிலருக்கு முகத்தில் அதிகமாக முடி வளருகிறது. இதை நிரந்தரமாக எப்படி தடுப்பது என்று தெரியாமல் சிலர் விழி பிதுங்கி நிற்கின்றனர். இதற்கும் நிரந்தர தீர்வு உண்டு.

அழகு நிலையத்தில் இதற்காகவென்றே சிகிச்சைகள் இருக்கின்றன. மாதம் இரண்டு முறை சிகிச்சை எடுத்துக்கொண்டால் முகத்திலுள்ள முடிகளை நீக்கிவிடலாம். மொத்தமாக ஒரு வருடம்வரை இதைத்தொடர வேண்டும். அதேபோல் மருத்துவரை அணுகி லேசர் சிகிச்சையும் எடுத்துக் கொள்ளலாம்.

சிலர் தலை முடியை ஸ்ட்ரெய்டனிங் செய்கிறார்கள் பின், சில மாதங்கள் கழித்து ரீபொன்டிங் செய்கிறார்கள். பின் வீட்டிலேயே அயர்னிங் செய்து கொள்கிறார்கள். இவை அலுத்துப் போனதும் முடியை பழைய நிலைக்குக் கொண்டுவர என்ன செய்யவேண்டும் என தவிக்கிறார்கள்.


இப்படியானவர்கள் உங்கள் முடி அதன் பழைய நிலையை அடைய நீங்கள் கட்டாயம் ஒரு வருடம் காத்திருக்கவேண்டும். 220 வோல்ட் மின்சாரத்தில் ஹேர் ஸ்ட்ரெய்டனிங் செய்வதால் மண்டை ஓடு பாதிக்கப்படும்.

அத னால் மண்டை ஓட்டிலிருந்து அரை இஞ்ச் தள்ளியே ஸ்ட்ரெய்டனிங் செய்ய வேண்டும். நீங்களே இதை வீட்டில் செய்யக் கூடாது. தகுந்த நிபுணரின் உதவியுடன்

> தவறான ஷாம்போ, அதிகமான பொடுகு, மன அழுத்தம், எதிர்பாராத மன அழுத்தம் காரணமாக பி காம்ளக்ஸை உடம்பு இழக்கிறது.இதன் காரணமாகவும் இளநரை வரும்

செய்ய வேண் டும். ஒரு மாதத்தில் முடி அரை இஞ்ச் முதல் முக்கால் இஞ்ச் வரை வளரும்.

ஆகவே, நீங்கள் விரும்பும் பழைய நிலையை அடைய ஒரு வருடம் வரை



காத்திருக்க வேண் டும். மொத்தத்தில் முடிகொட்டுவதற்கு முக்கி யமான காரணமே மன அழுத்தம் தான். இதற்கும் சிகிச்சை உண்டு.

சிகிச்சையை ஆறுவாரம் தொடர்ந்து எடுத்தால் போது மானது. முதல் நாள் தகுந்த நிபுணரிடம் செய்துகொண்டு இதன் தொடர்ச்சியை வீட்டி லேயே செய்து கொள்ளலாம்.




# இரத்த நாளங்களில் அடைப்பு ஏற்படுவது ஏன்?

மனித உயிருக்கு உத்தரவாதமில்லை. நேற்று இருந்தவர் இன்றில்லை. "10 நிமிடங்களுக்கு முன் நன்றாக பேசிக்கொண்டிருந்தவர், திடீரென போய்விட்டாரே. இன்று காலை கூட என்னிடம் தொலைபேசியில் பேசினார். இறந்துவிட்டதாக செய்தி வருகிறதே. நேற்று நன்றாக நடமாடிக் கொண்டிருந்தவர் இன்று பக்கவாதம் தாக்கி முடமாகி விட்டாரே" பலர் ஆதங்கப்படுவதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இதற்கெல்லாம் காரணம் என்ன இரத்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்புத்தான் காரணம். இதயத்திற்கு செல்லும் இரத்த நாளங்களில் அடைப்புகள் ஏற்படும்போது அது மாரடைப்பாக உயிரை மாய்க்கிறது. மூளைக்கு செல்லும் இரத்த நாளங்களில் அடைப்புகள் ஏற்படும் போது அது பக்கவாதமாக பரிமாணமெடுத்து மனிதனை முடக்கிவிடுகிறது. துடிக்கும் மனித இதயம், மனிதனுக்கும் வாழ்வை வழங்குகிறது. மனிதன் வாழ வேண்டுமானால் அவனது இதயம் நிமிடத்திற்கு 72 முறை துடித்தே ஆகவேண்டும். இவ்வாறு துடித்து துடித்து மனிதனுக்கு வாழ்வை வழங்கும் இதயம் துடிப்பதற்கு சக்தி தேவை. அந்த சக்தி இதயத்திற்குச் செல்லும் இரத்தக் குழாய்கள் மூலம்தான் இதயத்திற்கு கிடைக்கிறது. இந்த இரத்த நாளங்களில் அடைப்புகள் ஏற்படும் போது இதயத்திற்கு செல்லும் இரத்தம் தடைப்படுகிறது. இதனால் நெஞ்சுவலி, மாரடைப்பு ஏற்படுகிறது. இதனைப் போல் மூளைக்கு செல்லும் இரத்தக் குழாய்களில் அடைப்புகள் ஏற்படும்போது அது பக்கவாதமாக பரிமாணம் எடுத்து மனித வாழ்வை சீர்குலைக்கிறது.

இதயத்திற்கும் மூளைக்கும் இரத்தம் மற்றும் தேவையான சத்துக்களை கொண்டு செல்லும் இரத்த நாளங்கள் இதயத்தை போலவே சுருங்கி விரியும் தன்மை உடையது. அதனால் தான் அவற்றில் இரத்த ஓட்டம் நடைபெறுகிறது.

இரத்தக் குழாய்கள் சுருங்கி விரிய "நைட்ரிக் ஒக்சைட்" என்ற இரசாயன பொருள் உதவுகிறது. இது நமது உடலிலேயே உற்பத்தி ஆகும் பொருள். இதுதான் இரத்தக் குழாய்களுக்குள் சென்று அவற்றை சுருங்கி விரிய உதவுகிறது.

உயர் இரத்த அழுத்தம் காரணமாகவும், குருதியில் கொழும்புச்சத்து மற்றும் இரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகமாகும்போது "நைட்ரிக் ஒக்சைட்" சுரப்பது குறைகிறது. மேலும் மன இறுக்கமும், மனக்கவலையும் கூட நைட்ரிக் ஒக்சைட் சுரப்பதை கெடுக்கிறது. புகை பிடிப்பது, மது அருந்துதல், அசை உணவுகளை அதிகளவு உட்கொள்வது போன்றவை கூட இந்த நைட்ரிக் ஒக்சைட் சுரப்பதைக் குறைக்கிறது.

இதன் உற்பத்தி குறையும்போது இரத்தக் குழாய் சுருங்கி விரிவது குறையும். அப்பொழுது இரத்தக் குழாய்களில் கொழுப்பு படிய தொடங்கும். கொழுப்பு சேர்ந்து குழாயை அடைத்து விடும். இதனால் மாரடைப்பு, பக்கவாதம் ஏற்பட வாய்ப்பாகிறது.

**இரத்தக் குழாய் அடைப்புகள் வராமல் தடுப்பது எப்படி?**

இரத்த அழுத்தத்திற்கு சரியான மருந்துகள் உட்கொண்டு அதை சீராக வையுங்கள். சர்க்கரை நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வாருங்கள். கொழுப்புள்ள பொருட்களான நெய், வெண்ணெய், தேங்காய், எண்ணெய், முட்டை மஞ்சள் கரு, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி இவற்றை தவிர்த்திடுங்கள். சிகரெட்டை தூக்கி எறியுங்கள். மதுவை நிறுத்துங்கள். எண்ணெயில் பொரித்த உணவுகளையும், நெய்யால் செய்த பண்டங்களையும் குறையுங்கள். உப்பு அளவோடு சேர்த்துக்கொள்ளுங்கள். இனிப்பான பழங்கள், கிழங்குகள், பழச்சாறுகள் இவற்றை நீரிழிவு நோயாளிகள் எடுத்தல் கூடாது.

இவற்றை விட மேலானது உடற்பயிற்சி, நாள்தோறும் காலை, மாலை அரை மணி நேரம் நடைப்பயிற்சியை மேற்கொள்ளுங்கள்.

சைக்களிள் ஓட்டுவது, நீந்துவது போன்ற உடற்பயிற்சிகளை செய்யுகள். உணவு வகைகள் அதிகம் உட்கொள்வதை குறையுங்கள். உங்கள் இதயம் பாதுகாப்பாக இருக்கும்.

# அளவுக்கதிகமாக பசிக்கிறதா...? இதுவும் ஒரு நோயே!

மணிமேகலை என்ற காப்பியத்தில் காயசண்டிகை என்றொரு பாத்திரம் உண்டு... அவளுக்கு தீராத பசி இருக்கும்... எதை... எப்போது சாப்பிட்டாலும்...சாப்பிட்டு முடித்தவுடனேயே மறுபடியும் பசியெடுக்கும்... காயசண்டிகை போலவே இப்போதும் பலரும் தீராத பசியால் தவித்துக்கொண்டிருக்கிறார் கள்!

இப்படி தீராத பசி இருப்பவர்களுக்கு பல்வேறு நோய்கள் வரும் என்று கண்டுபிடித்துள்ளனர் மருத்துவ ஆய்வாளர்கள். உங்களுக்கும் இருக்கலாம்... ஆனால் நாம் இது ஏதோ பசி எடுக்கிறது என்றும், சாப்பாடு போதவில்லை என்றும் தவறாக நினைத்துக் கொண்டு மேலும் மேலும் கூடுதலாக சாப்பிட்டு வருவோம். குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட அளவு உணவு சாப்பிடுவதே சரி. நேரம் காலமில்லாமல்... குறிப்பிட்ட அளவு என்றில்லாமல் அதிகமாக சாப்பிடும் போது அது உடலுக்கு நோயை ஏற்படுத்தும்!

சாதாரணமாக, பெண்களுக்கு மாதவிலக்கு தொடங்குவதற்கு முந்தைய நாட்களில் அதிகமாக பசி எடுக்கும். குறிப்பிட்ட சிலருக்கு அதிகமாக பசி எடுக்கலாம். அதாவது உடற் பயிற்சி செய்பவர்கள், விளையாட்டுவீரர் மற்றும் வீராங்கனைகள், கர்ப்பிணிப்பெண்கள் ஆகியோருக்கு பசி கூடுதலாக இருக்கும். இதுவும் சாதாரணம் தான். அதுமட்டுமல்லாமல் பத்து வயதுக்கு கீழே உள்ள சிறுவர், சிறுமியர்களுக்கு அதிகமாக பசி எடுத்தாலும் அது இயற்கைதான்.

ஆனால் அதற்கும் மேலே உள்ளவர்கள், அதிக பசியால்...கூடுதலாக சாப்பிட்டுக் கொண்டே இருப்பவர்களுக்கு பல்வேறு நோய்கள் தாக்க ஆரம்பிக்கின்றன. சோர்வு, வயிறு எரிச்சல், கை, கால் உளைச்சல், வயிற்றில் ஏதாவது அவஸ்தை என்று அறிகுறிகள் இருந்தால்..எப்போதும் அதிக பசியோடு இருந்தால் அது கண்டிப்பாக பசி நோய்தான் என்று கூறுகிறார்கள் மருத்துவ ஆய்வாளர்கள்.

இப்படி தொடர்ந்து சாப்பிடுவதால் உடல் எடை கூடிக் குண்டாகி விடுவார்கள். அப்போது தான் மனதுக்குள் ஒருபயம் வந்து எட்டிப் பார்க்கும். இந்தப் பயத்தால் சாப்பிடும் அளவைக் குறைக்காமல் நன்றாக மூக்கு முட்ட சாப்பிட்டுவிட்டு வாய்க்குள் விரலை விட்டு வாந்தி எடுக்க ஆரம்பிப்பார்கள். இருபது முதல் 35 வயதுக்குள் இருப்பவர்களுக்கு இந்த மாதிரியான பழக்கம் அதிகமாக இருக்கும்! மனநெருக்கடி, பதற்றம், மன அழுத்தம் அதிகமாக உற்சாகமின்றி காணப்படுவார்கள். இவர்களுக்கு சந்தோஷமோ... துக்கமோ... அதை சாப்பாடு மூலம்தான் தீர்த்துக் கொள்வார்கள். சிலர் தங்களுக்கு மன அழுத் தம் தீரவேண்டும் என்பதற்காக நன்றாக சாப்பிடுவார்கள்.

முன்பெல்லாம் மனசு சரியில்லை என்றால் சாப்பிடாமல் இருப்பார்கள். ஆனால், இன்றைக்கு பலரும் மனசு சரியில்லை என்றால் நேர்மாறாக..அதிகமாக சாப்பிட்டு மனதை தேற்றிக் கொள்கிறார்கள்.

இப்படி மன அழுத்தம் அதிகமாகும்போது அதிகமாக சாப்பிடுபவர்களில் பெரும்பாலும் பெண்கள் தான் அதிகம்! ஆனால் ஆண்கள் மன அழுத்தத்திற்கு ஆளாகும்போது மதுவுக்கு அடிமையாகி விடுகின்றனர். சமுதாய சூழ்நிலைகளால் பெண்கள் மதுவுக்கு பதில் இனிப்பான உணவுகளை அதிகமாக சாப்பிட்டு தங்களுடைய மன அழுத்தத்தை தீர்த்துக்கொள்கின்றனர்.

சிலருக்கு அதிகமாக பசிஇருந்தால் அது நீரிழிவு நோயின் அறிகுறியாகவும் இருக்கலாம். இரத்தத்தில் சர்க்கரையின் அளவு கூடுதலாக இருக்கும்போது.... இன்சுலின் ஹோர்மோன் திசுக்களுக்கு இல்லாமல் போகும்போது.. சர்க்கரையை உடல் ஏற்றுக் கொள்ளாது. இதனால் பசி அதிகமாக எடுக்கும். சிலநேரங்களில் நீரிழிவு நோயாளி



களுக்கு மருந்து, மாத்திரை சாப்பிட்ட பிறகும் பசி அதிகமாக எடுக்கும். அதனால் தான் டாக்டர்கள், நீரிழிவு நோயாளிகளிடம், உணவு விஷயத்தில் கட்டுப்பாடாக இருக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

இந்த தீராதபசி நோய்க்கு நவீன மருத்துவத்தில் சிகிச்சைகள் உள்ளன. தேவையில்லாமல் அடிக்கடி அதிகமாக பசி எடுத்தால் டாக்டரிடம் சென்று பரிசோதனை செய்து பார்த்துக்கொள்வது நல்லது. சிலர் தன்னிடம் இந்தக் குறைபாடு உள்ளது என்று தெரிந்தும் டாக்டரிடம் செல்வதில்லை. இது தவறு. உங்களுக்கும் இப்படி ஒரு பிரச்சினை இருந்தால் உடனடியாக டாக்டரை அணுகி, தீராத பசியை தீர்த்துவிடுங்கள்.

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து எதிர்பார்த்த அளவு மக்கள் வவுனியா வரவில்லை

## ஜனாதிபதியின் சிரேஸ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியில் கடந்த சில மாதங்களாக இடம் பெற்றுவரும் மோதல்கள்ஒரு தீர்க்கமான கட்டத்தை நெருங்கிவரும் நிலையில் எதிர்பார்த்தளவுக்கு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்துமக்கள் வவுனியாவுக்கு வரவில்லை என்று ஜனாதிபதியின் சிரேஸ்ட ஆலோசகர், பாராளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்களை தங்கவைத்துப் பராமரிக்கக்கூடிய வசதிகள் வவுனியாவில் செய்யப்பட்டுள்ள போதிலும் மிகக் குறைந்தளவு தொகையினரே இது வரையில் புலிகளின் கட்டுபாட்டுப் பகுதியிலிருந்து வவுனியாவுக்கு வந்திருப்பதாக அவர் குறிப்பிடுகிறார்.

இடம் பெயர்ந்து வரும் மக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு ஜனாதியின் பணிப்புரையின் பேரில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறும் பசில் ராஜபக்ஷ அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சின்செயலாளர்ஆகியோர் ஐ.நா. இலங்கைவதிவிடப் பிரதிநிதி நீல்பூனே மற்றும் உலக உணவுத் திட்டப் பிரதிநிதி மொஹமட் சலாஹீன் ஆகியோரின் உதவியுடன் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருப்பதாகக் கூறினார்.

எனினும் எதிர்பார்த்தளவுக்கு மக்கள் வவுனியாவுக்கு வரவில்லை என்று கூறும் வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் ஏற்கனவே ஆறு இடைத்தங்கள் முகாம்கள் இதற்கென அமைக்கப்பட்டுள்ள போதும் இது வரையில் எவரும் வவுனியாவுக்கு வரவில்லை என்று தெரிவிக்கிறார்.

மோதல்கள் கிளிநொச்சியைஅண்மித்து வரும் நிலையில் மக்கள் தர்மபுரம் மற்றும் விசுவமடு பிரதேசங்களுக்கு அதிகளவில் இடம் பெயர்ந்திருப்பதாக வன்னித் தகவல்கள் கூறுகின்றனர்.

எனினும் இவர்கள்படிப்படியாக படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருவார்கள் என்ற நம்பிக்கைதமக்கு இருப்பதாக ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷகூறுகிறார்.

கிழக்குமாகாணத்தில் எமது அனுபவத்தின் படி மூதூரிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் முதலில் சம்பூருக்குச் சென்று பின்னர் அங்கிருந்து ஈச்சிலம்பற்றுக்கும் வாகரைக்கும் சென்றனர். அதன்பின்னர்அங்கிருந்து அவர்கள் படைக்கட்டுப் பாட்டுப் பகுதிக்கு வந்தார்கள். இதே போல் மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளிலிருந்து இடம் பெயரும் மக்கள் படைக்கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு படிப்படியாக வந்து சேர்வார்கள் இதற்குச் சிறிது காலம் பிடிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

### மார்க்கம் என்ன?

கடைசியாக வெளியாகியிருக்கும் களநிலவரங்களின் படி இலங்கை இராணுவத்தின் 57வது படைப்பிரிவு கொக்காவில் ரயில் நிலையப் பகுதியைக் கைப்பற்றியிருப்பதாக் கூறப்படுகிறது. இராணுவத்தினர் தற்போது ஏ-9 வீதியிலிருந்து 400மீற்றர் தூரத்தில் தரித்திருப்பதாகவும் படைத்தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

கிளிநொச்சியை நோக்கிய தாக்குதல்கள் அடுத்த வராம் ஆரம்பிக்கப்படும் என்று இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அறிவித்திருக்கும் நிலையில் படையினர் அடுத்த கட்ட நகர்வுகள் ஏ-9வீதியை அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து விடும் என்றே எதிர்பார்க்கலாம். இந்த நிலையில் கிளிநொச்சியிலிருந்து இடம் பெயரும் மக்கள் வவுனியாவை வந்தடைவதற்கான மார்க்கமான ஏ-9 வீதி முற்றாக தடைப்பட்டு விடும்.

அதன் பின்னர் மக்கள் வவுனியாவுக்கு வருவதனால் பரந்தன் வீதியூடாக புதுக் குடியிருப்புக்குச் சென்று அங்கிருந்து ஒட்டு சுட்டான் ஊடாகமாங்குளத்தை அடைந்து பின்னர் ஏ-9வீதியூடாக புளியங்குளம் மார்க்கமாக ஓமந்தைக்கு வரவேண்டும்.

வன்னியில் தற்போதுள்ள சூழ் நிலையில் இவ்வளவுதூரத்தைக் கடந்த பயணித்து மக்கள் வவுனியாவைவந்தடைவதுமிகவும் சிரமமானது என்று உதவிப் பணியாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அதற்கானசீரானபோக்குவரத்து மார்க்கங்களும் கிடையாது என்று அவர்கள் குறிப் பிடுகின்றனர்.

### கிளிநொச்சியிலிருந்து மக்கள்வவுனியா வருவார்களா?

இதேவேளை, கிளிநொச் சியை அண்டிய பிரதேசங்க ளில் மோதல்கள் தீவிரமடைந் துள்ள நிலையில் வவுனியா நகரில் பெருமளவு படையினர் குவிக்கப் புட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இராணுவம் விமானப்படை மற்றும் விசேட அதிரடிப் படையினர் மிக அதிகளவில் அங்கு குவிக்கப்பட்டிருப்பதாக சுயாதீனத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

இந்தப்பகுதியின் பாது காப்பை உறுதிப்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படிருப்பதாகக் கூறப்படுகின்ற போதிலும் இது மக்களுக்கு பெரும் அசௌகரி யங்களை ஏற்படுத்துவதாக அங்குள்ள அரச சார்பற்ற நிறுவன பணியாளர்கள் கூறகின்றனர். தமது நடமாட்டம் இதனால் பெருமளவு பாதிக்கப்பட்டிருப்பதாகவும் மக்கள் தம்மிடம் முறையிட்டிருப்பதாகவும் உதவிப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு வவுனியா முற்றிலும் இரா ணுவமயப்படுத்தப்பட்டுள்ள ஒரு சூழ் நிலையில் வன்னியில் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிகளிலிருந்து மக்கள் வவுனியாவுக்கு வருவார்களா என்பது சந்தேகமே என்று தம்மை வெளிக்காட்ட விரும்பாத உதவிப் பணியாளர்கள் சிலர் கூறுவதாக கொழும்பு ஆங்கில வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது. கிளிநொச்சியிலிருந்து வவுனியாவுக்கு நகர அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டாலும் ஒரு தடுப்பு



முகாமுக்கு வருவதற்கு அவர்கள் விரும்பமாட்டார்கள் என்றும் அவர்கள் கூறுவதாக அந்தப் பத்திரிகை செய்தி குறிப்பிடுகிறது. மேலும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள மக்களை வவுனியாவுக்கு வருமாறு அரசாங்கம் விடுத்தசெய்தி அந்தப் பகுதி மக்களைச் சென்றடைந்ததா என்பது சந்தேகமே என்று தெரிவித்துள்ள உதவிப்பணியாளர்கள் அவ்வாறு மக்கள் வருவதாக இருந்தால் அவர்கள் பாதுகாப்பாகப் பயணம் செய்வ தற்குரிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டதாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-5)

# பொது நலவாய தலைவர்களின் அடுத்த மாநாடு இலங்கையில்

(கொழும்பு)

2009ஆம் ஆண்டில் பொது நலவாய தலைவர்களின் மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் 63 ஆவது கூட்டத்திற்காக நியூயோர்க் சென்றிருந்த பொதுநலவாய தலைவர்கள்சந்தித்த போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆண்டு கொழும்பில் பொது நலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு நடைபெறவுள்ளதாக ஊடக அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜுலை மாதம் 27 ஆம்திகதி முதல் ஆகஸ்ட் 3ஆம் திகதி வரையில் நடைபெற்ற சார்க் மாநாட்டின் போது 2800 கோடி ரூபா செலவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை பொது நலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு நடைபெற்று வருகின்றது.

(அ-5)

# இலங்கையில் 20 வீதமான சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்குள்ளாகி உள்ளனர்

## ஐ.நா. அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 20 வீதமான சிறுவர் சிறுமியர் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என் ஐக்கிய நாடுகள் அறிக்கையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உலகின் 1.2 மில்லியன் சிறுவர் சிறுமியர் துஷ்பிரயோகங்களுக்கு உட்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் பெரும்பான்மையான சிறுவர் சிறுமியர் ஆசிய கண்டத்தைச் சேர்ந்தவர்கள் என அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான சிறுவர் துஷ்பிரயோகங்களினால் சிறுவர்களது கல்வி, மனோ நிலை மற்றும் சுகாதார நிலைமைகள் பெரிதும் பாதிப்படையக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)


## யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
## தரம் 06ஆம் வகுப்பு அனுமதிக்கான விண்ணப்பம் கோரல் -2009

தரம் 6ஆம் வகுப்பு அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களை பாடசாலை நேரத்தில் கல்லூரி அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பமுடிவுத் திகதி :- 31.10.2008

(சி/1616)

அதிபர்



## JAFFNA HINDU COLLEGE
## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
### தரம் 6 அனுமதி 2009

2008 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் எமது கல்லூரியில் படிவங்களைப் பெற்று அனுமதிக்காக 20.10.2008 இற்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றனர்.

(சி/1608)

அதிபர்



## பனை அபிவிருத்திச் சபையில் விற்பனைக்கு

பனை அபிவிருத்திச் சபையில் சிற்றுணவு தயாரிக்கும் FOOD EXTRUDER என்ற இயந்திரம் விற்பனைக்கு உள்ளது.

கொள்வனவு செய்ய விரும்புவோர் காரியாலய நாட்களில் இதனை இல: 53 கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள களஞ்சியத்தில் பார்வையிட்டு தங்கள் கேள்வித் தொகையினை 15.10.2008க்கு முன்னராக சபையின் காரியாலயத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "FOOD EXTRUDER" என்று குறிப்பிடவும்.

கேள்விப் பத்திரங்கள் 16.10.2008 காலை 10.00மணியளவில் பனை அபிவிருத்திச் சபையின் யாழ்ப்பாணம் காரியாலயத்தில் திறக்கப்படும்.

1.Digestion Unit
2.Extrusion Unit
3.Control panal
4.Solid- Solid Mixer
5.Solid -Solid Mixer

*அனுப்ப வேண்டிய முகவரி*

*தலைவர்,*
*பனை அபிவிருத்திச் சபை,*
*தேசிய வீடமைப்புச் செயலகக் கட்டடம்,*
*கண்டி வீதி, யாழ்ப்பாணம்.*

(சி/1615)

தவறிழைத்தவன் மறந்து விடுகின்றான். ஆனால் தவறிழைக்கப்பட்டவன் மறப்பதில்லை.

*- கொரியா*

வலம்புரி

## மின்சாரம் தடைப்படுவதை தடை செய்வது எப்போது?

யாழ்ப்பாண மின்சார சபை தினமும் அமுல்படுத்தும் மின்வெட்டு நின்று போவது எப்போது என்ற கேள்வி யாழ்ப்பாண மக்களிடம் நீண்ட காலமாக இருந்து வருகின்றது.

யாழ்ப்பாணப் பத்திரிகைகளும் அடுத்த மாதம் முதல் மின்வெட்டில்லை. முழு நேரமும் மின்சாரம் கிடைக்கும். உரிய இயந்திரங்கள் பொருத்தப்படுகின்றன எனப் பல தடவைகள் செய்தி வெளியிட்டு இப்போது அந்தச் செய்தியை பிரசுரிக்க முடியாதுள்ளது.

அப்படியேதேனும் செய்தி வெளியிட்டால் பத்திரிகைகளுக்குச் செய்தி கிடைக்காமல் இதைப் போட்டு இடம் நிரப்புகின்றார்கள் என மக்கள் கதைத்துக் கொள்வார்கள்.

அந்தளவுக்கு யாழ்ப்பாண மின்சாரச் செய்தி புளித்துப் போய் விட்டது. யாழ்ப்பாணத்திற்கு முழு நேரம் மின்சாரம் வழங்குவதற்கு எமக்குப் பூரண விருப்பம். ஆனால் என்ன செய்வது? எங்கள் சக்திக்கு அப்பாற்பட்ட காரணங்களால் மின்சாரத்தை முழு நாளும் வழங்க முடியாதுள்ளது என யாழ்ப்பாண மின்சார சபையின் உயரதிகாரிகள் கூறுவார்களாயின் அது நியாயமானதென்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

அப்படியானால் தினமும் மின்வெட்டு இடம்பெறுவது நம் ஊழ்வினைப் பயன் என்று பேசாமல் விட்டு விடலாம். ஆனால் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்கள் 'லைற்' இருந்தாலாவது... தடுத்திருக்கலாம் என்று நினைக்க வைக்கின்றது.

இதன் காரணமாகவே முழுநாளும் மின்சாரம் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் எனத் துணையற்றவர்கள், தனிமையில் இருப்போர் எதிர்பார்க்கின்றனர்.

அநேகமான திருட்டுச் சம்பவங்களின் நுழைவு மின்சாரம் தடைப்படும்போதே நடப்பதாகக் கூறப்படுகின்றது. எனவே யாழ்ப்பாணத்தில் மின்சார வெட்டை நிறுத்தி முழுநேரமும் மின்னொளி பாய்ச்ச உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேநேரம் தனித்து மின்சாரத்தினால் மட்டும் திருட்டை ஒழிப்பதென்பது முடியாத காரியம். தற்போது யாழ்ப்பாணத்து மக்களின் உறங்கு நேரம் மிகச் சொற்பம்.

'தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் தரப்படும்; தேடுங்கள் கிடைக்கும்' என்ற வாசகம் இப்போது வீட்டு உரிமையாளர்களினால் திருடர்களுக்குச் சொல்லப்படும் வேத மந்திரமாகவுள்ளது.

கூடவே 'எங்களைத் தீண்டாதீர்கள், உங்களுக்காகவே எங்கள் சொத்து' என்றும் உபசார மந்திரத்தைத் திருடர்களுக்காக உச்சாடனம் செய்யும் பரிதாபத்தில் மக்கள் உள்ளனர்.

இத்தகைய துன்ப நிலையைப் போக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்கு மேலாக திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் திருந்தி வாழ்வதற்கான வழிமுறைகளும் தொழில் ஏற்பாடுகளும் உருவாக்கப்படுவது அவசியமாகும்.

இல்லையேல் இன்றைய பொறுப்பற்ற ஆட்சி அதிகாரங்களின் கீழ் இத்தகைய கொள்ளைச் சம்பவங்களும் திருட்டுக்களும் மேன்மேலும் அதிகரிக்கவே செய்யும்.

# நவராத்திரி விரதம் நல்கிடும் நன்மைகள்

**இன்று நவராத்திரி விரத ஆரம்ப தினமாகும்.**

மனம் பொறிவழிபோகாது நிற்றல் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு,காயம் எனும் மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு வழிபடல் *விரதம்* என ஆறுமுக நாவலர் பெருமான் வரையறை கூறியுள்ளார்.

சைவர்களாகிய நாம் சிவன், சக்தி, விநாயகர், முருகன், விஷ்ணு ஆகிய தெய்வங்களுக்காக விரதங்களை அனுஷ்டிக்கிறோம். அவற்றிலே சக்திக்காக நாம் நவராத்திரியை விஷேடமாக அனுட்டிப்பது வழக்கம்.

புரட்டாதி மாத சுக்கில பட்சப் பிரதமை முதல் நவமி ஈறாக ஒன்பது நாட்கள் நவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படும். நாம் பிரதமைத்திதியில் கும்பம் வைத்து பூஜை ஆரம்பித்து முதல் மூன்று நாட்களும் வீரத்தை வேண்டி பராசக்தியையும் (துர்க்கை), அடுத்த மூன்று நாட்களும் செல்வத்தை வேண்டி மகாலக்சுமியையும், இறுதி மூன்று நாட்களும் கல்வி, அறிவு, சகல கலைஞானங்கள் என்பவற்றை வேண்டி சரஸ்வதி தேவியையும் வழிபடுவது வழக்கம்.

ஆனால் நவராத்திரி நாட்கள் முழுவதும் மூன்று தேவியாரையும் எல்லா சக்தி அம்சங்களையும் ஒருமித்துப் போற்றி வழிபடுவதே நல்லது. ஆலயங் களில் கும்பம்வைத்து ஒன்பது நாள் பூஜையிலும் துர்க்கா, லக்சுமி, சரஸ்வதி ஆகிய மூன்று சக்திகளையும் சேர்த்துச் செய்யப்படும் பூஜை சமஷ்டி பூஜை எனப்படும்.

கும்பம் வைத்தல் நவராத்திரி விரதத்தில் முக்கிய அம்சமாகக் கருதப்படும். அதனால், நவராத்திரி பூஜையை கும்ப பூஜை என்று சிறப்பித்துக் கூறும் வழக்கம் உண்டு. ஒன்பது நாட்களும் சிறப்பாக மூன்று சக்திகளையும் வழிபட்ட பின் பத்தாம் நாள் விஜயதசமி என வெற்றியைக் குறிக்கும் நாளாக கொண்டாடப்படும் அன்று கோயில்களில் மானம் பூ (வாழை வெட்டு) திருவிழா நடைபெறும்.



அந்நாளில் ஆயுத பூஜை சிறப்புப் பெறுகிறது. வேலை செய்வோர் தங்கள் வேலை உபகரணங்களை சக்தியின் படத்துக்கு முன்னால் வைத்து வழிபடுவர். கல்வி கற்கும் மாணவர்கள் தங்கள் பாடப்புத்தகங்களை வைத்து வழிபடுவர். அத்துடன் சிறுபிள்ளைகளுக்கு ஏடுதொடக்கும் நிகழ்வும் விஜயதசமியன்றே நடைபெறும்.

**எஸ்.கிஷோத்**

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஓர் ஆசானிடம் அழைத்துச்சென்று ஏடு தொடக்குவர். இவ்வாறு பல சிறப்புகள் வாய்ந்த நவராத்திரி விரதத்தை அனுஷ்டித்து சிறப்புப் பெறுவோமாக .

# மனித உரிமை பாதுகாவலர்களைப் பாதுகாக்க வேண்டும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிக்கை

(கொழும்பு)

மனித உரிமை பாதுகாவலர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நீதித்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

ரான்ஸ்பெரன்சி இன்டர்நஷனல் அமைப்பின் இலங்கைக்கான தலைவரும், முன்னணி மனித உரிமைகள் சட்டத்தரணியுமான ஜே. சி. வெலியமுனவின் வீட்டின் மீது கைக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்தே ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது. மனித உரிமைகளைப் பாதுகாப்பவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உதவிசெய்யவேண்டுமென சட்டத்தரணிகள் சங்கம், உயர்நீதிமன்றம், நீதித்துறை ஆகியவற்றிடம் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

முன்னணி சட்டத்தரணியான வெலியமுன பல்வேறு மோசடிகள் மற்றும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக அடிப்படை உரிமை வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளார். இதில் பொலிஸாருக்கு எதிரான இலஞ்ச மோசடி வழக்குகளும் உள்ளடங்குகின்றன.

இலங்கையில் இடம் பெற்ற 92 இலஞ்ச மோசடிகள் தொடர்பான விபரங்கள் கடந்த வாரம் ரான்ஸ்பெரன்சி இன்ர நஷனல் வெளியிட்ட வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருந்தன. பல்வேறு அரசியல் வாதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் பல இன்னமும் முடிவடையாமல் உள்ளதுடன், பொலிஸ் அதிகாரிகளால் இளைஞர் ஒருவர் கந் தானையில் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக வெலியமுன தாக்கல் செய் திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இந் நிலையிலேயே வெலியமுனவின் கொகுவல இல்லம் மீது கடந்த சனிக்கிழமை கைக்குண்டுத் தாக்கல் நடத்தப்பட்டுள்ளது. அவரின் வீட்டிலிருந்து வெடிக்காத நிலையிலிருந்த மற்றொரு கைக்குண்டையும் பொலிஸார் மீட்டிருந்தனர்.

சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் பொலிஸாருக்கு எதிராகத் தொடர்ந்தும் நடத்தப்பட்டு வரும் தாக்குதல்கள் குறித்து ரான்ஸ் பெரன்சி இன்டர்நஷனல் மற்றும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு என்பன கவனம் செலுத்தியுள்ளன.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் தொடர்பான எந்த விதமான சாட்சியங்களும் இல்லையென்றபோதும், மனித உரிமைகள் சட்டத்தரணியாகவும், ஊழல்மோசடிகளுக்கு எதிராகச் செயற்பட்டார் என்பதுமே இந்தத் தாக்குதலுக்குக் காரணமாக அமைந்துள்ளன. என்பதை ஊகித்துக் கொள்ளக்கூடியதாக உள்ளது என ரான்ஸ்பெரன்சி இன்டர்நஷனல் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-6)

# இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக காங்கிரஸ் அரசு செயற்படுகிறது

## கருணாநிதி மௌனம் சாதிக்கிறார் எனவும் பா.ஜ.க குற்றச்சாட்டு

(சேலம்)

மத்தியில் தி.மு.க அங்கம் வகிக்கும் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகச் செயல்படுகிறது. இப்பிரச்சினை குறித்துக் கவலைப்படாமல் தமிழக முதல்வர் கருணாநிதி மௌனம் காக்கிறார் என்று பா.ஜ.க பொதுக்குழு குற்றம் சாட்டியது.

சேலத்தில் பா.ஜ.க பொதுக்குழு கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் பல்வேறு பிரச்சினைகள் குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழர்களுக்கு எதிராக இந்திய அரசின் செயல்பாடு அமைந்துள்ளது. இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் ஒரே வழி இராணுவத் தீர்வு சாத்தியமில்லை.

இலங்கை இராணுவத்துக்கு உதவும் விதத்தில் இங்கிருந்து 265 இராணுவப் பொறியியலாளர்கள் இலங்கைக்கு இந்திய அரசு அனுப்பியது.வன்மையாக் கண்டிக் கத்தக்கது. இத்தகைய செயலை தான் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் அரசு மேற் கெண்டுள்ளதைக் கண்டிக்காமல் கருணாநிதி மௌனம் காப் பது கண்டனத்துக்குரியது.

தன் பதவியைத் தக்க வைத்துக்கொள்கின்ற சுயநல நோக்குடன் இலங்கைத் தமிழர் நலனை காற்றில் பறக்க விட்ட கருணாநிதி இனியாவது தனது தவறை உணர்ந்து அங்கிருந்து இராணுவப் பொறியியலாளர்களை திரும்ப அழைக்க மத்திய அரசை நிர்ப்பந்திக்க வேண்டும்.

(அ-6)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி மனிதன் தெய்வீகமானவன்



"அழியாத பேரின்பத்தின் குழந்தைகளே" ஆ.ஆ! எவ்வளவு இனிமையான நம்பிக்கையூட்டும் பெயர்! அருமைச் சகோ தரர்களே! அந்த இனிய பெயரால் உங்களை நான் அழைக்க அனுமதி தாருங்கள் அழியாத பேரின்பத்தின் வாரிசுகளே ! ஆம். உங்களைப் பாவிகள் என்று அழைக்க இந்து மறுக்கிறான். நாம் ஆண்டவனின் குழந்தைகள் அழியாத பேரின் பத்தின் பங்கு தாரர்கள் புனிதமானவர்கள் பூரணர்கள் வையத்துள் வாழும் தெய்வங் களே! நீங்கள் பாவிகளா ? மனிதர்களை அப்படிச்செல்வதுபாவம். மனித இயல்புக்கே அது அழியா களங்கம் .சிங்கங்களே வீறு கொண்டு எழுங்கள் . நீங்கள் ஆடுகள் என்கிற மாயையை உதறித்தள்ளுங்கள் நீங்கள் அழியாத ஆன்மாக்கள் சுதந்திரமான தெய்வீகமான நிரந்தரமான ஆன்மாக்கள் ! நீங்கள் ஜடப்பொருள் அல்ல ; சடப்பொருள் உங்கள் பணியாள். நீங்கள் ஜடப்பொருளின் பணியாள் அல்ல.

# இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் செயல் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதற்குச் சமன்

## வன்னி மாவட்ட எம்.பி. வினோ நோகராதலிங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் பங்கு இன்றியமையாதது என இருந்த போதிலும் எரியும் நெருப்பில் எண்ணெய் வார்ப்பதுபோல இரட்டை வேடம் போடுகின்ற இந்தியாவை நம்பி பயனில்லை என த.தே.கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

சர்வதேசத்தின் பக்கச்சார்பற்ற தன்மை இலங்கைப்பிரச்சினை தொடர்பில் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மேலும் அவர் தெரிவித்திருப்பதாவது,

தினமும் ஏதிலிகளாக்கப்பட்டுக்கொண்டிருக்கும் எமது தமிழ்ச்சமூகம் வாழவே வழியற்றவர்களாக உணவுக்கும் உறங்குவதற்கு அல்லாடிக்கொண்டிருக்கிறது. இதில் சிறுவர்களினதும் குழந்தைகளினதும் நிலைகள் மிக மிக பரிதாபமானதாகும்.

யுத்தத்தின் நடுவில் சிக்கித் தவிக்கும் மக்களின் நிலை குறித்து அலட்டிக்கொள்ளாத சிங்கள அரசு லொறிகளில் உணவு அனுப்பவதாக படம்பிடித்துசர்வதேசத்திற்கு காட்டிக்கொண்டிருக்கிறது.வன்னிக்கு அனுப்பப்படுகின்ற உணவுப்பொருட்கள் மற்றும் அத்தியவசியத் தேவைகள் பாதிக்கப்பட்டுள்ள மக்களை சென்றடையவில்லை. இராணுவத்தினரின் கெடுபிடிகளால் வன்னிக்குள் உணவு லொறி அனுமதிக்கப்படுவதில்லை.

சுமார் 4 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வாழ்கின்ற வன்னிப்பிரதேசத்திற்கு நூற்றுக்கணக்கான லொறிகளில் அத்தியவசியப்பொருட்களை அனுப்பினாலும் அது போதுமானதாக இருக்காது.

ஆனால் அரசு ஐந்தும் பத்தும் என உணவு லொறிகளை அனுப்பிக்கொண்டிருக்கிறது. அகதிகளை வைத்து ஏமாற்றி அரசியல் செய்துகொண்டிருக்கிறது சிங்களப் பேரினவாத அரசு.

இலங்கைத்தமிழர் பிரச்சினை மற்றும் வன்னி நிலவரங்கள் குறித்து சர்வதேச பிரதிநிதிகள் பக்கச் சார்பு காட்டவேண்டாம் என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் கேட்டுக்கொள்கிறது.

ஏனெனில் அண்மைக்காலமாக யுத்த நிலைவரம் தொடர்பில் இங்கு வருகின்ற சர்வதேச பிரதிநிதிகள் அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே வந்து செல்கின்றனர்.

அத்துடன் அரசுக்கு சாதகமான அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்படுகின்றன. சர்வதேசத்திற்கு உண்மை புரிய வேண்டுமானால் பக்கச்சார்பற்ற விதத்தில் சர்வதேச பிரதிநிதிகளின் வருகை அமைய வேண்டும். யுத்தப்பிரதேசங்களுக்குச் சென்று நிலைவரங்களை நேரில் அறிந்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

இலங்கைத்தமிழர் விடயத்தில் இந்தியா இரட்டைவேடம் போடுகின்றது. யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்றும் பேச்சுக்கு செல்ல வேண்டும் என்றும் ஊடகங்களுக்கு அறிவிக்கின்ற இந்தியா இலங்கை அரசுக்கு ஆயுத உதவியையும் ஆட்புல உதவியையும் அளித்து வருகின்றமை எமது தமிழினத்தையே ஏமாற்றுகின்ற செயலாகும்.

இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியாவின் தலையீடு மிக மிக இன்றியமையாதது என்பதை தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடக இருக்கிறது. இந்தியாவின் அண்மைக்கால நிலைப்பாடுகள் எரியும் நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போல அமைந்திருக்கின்றது.

தமிழக அரசியல் தலைவர்களினதும் அவர்களது ஆதரவாளர்களினதும் இலங்கைத் தமிழர் மீதான உணர்வலைகள் மகத்தானவை. அதற்காக நாம் கடமைப் பட்டுள்ளோம். தமிழகத்தில் இலங்கைத் தமிழருக்காக ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் நடைபெறுகின்றன.

ஆனால் கருணாநிதி இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அவருக்கு அதிகாரங்கள் இருந்து அதனை செய்யத் துணியவில்லை. கருணாநிதி இலங்கைத் தமிழர் குறித்து சிந்திக்கப்போவதில்லை தனது அதிகாரத்தையும் கட்சியின் செல்வாக்கையும் காப்பற்றிக்கொள்ளும் எண்ணமே அவருக்கு இருக்கிறது.

இந்நிலையில் கருணாநிதியையோ அல்லது இரட்டை வேடம் போட்டுக் கொண்டிருக்கின்ற இந்தியாவையோ நாம் நம்பி பயனில்லை அவர்களை நம்பி ஏமாறுவதை விட எமதுபிரச்சினையை நாமே தீர்த்துக் கொள்வதே சிறந்தது. (அ-6)

## வீதி திருத்தப்படுமா?

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேசசபை நிர்வாகப் பகுதியிலுள்ள அச்செழு பூலசிட்டி வளர்மதி வீதி இருபது வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமையால் இப் பகுதி மக்கள் போக்குவரத்து செய்வதில் பல சிரமங்களை எதிர் கொள்வதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ் வீதி சீர்கேடுகள் காரணமாக கடந்த இரண்டு வருடங்களுக்கு மேல் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பூலசிட்டி வளர்மதி சனசமூக நிலையம் மகஜர் மூலம் அறிவித்தும் எந்த வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என வளர்மதி சனசமூக நிலைய நிர்வாகி ஒருவர் தெரிவித்தார். இது விடயத்தில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் வீதியை திருத்த நடவடிக்கை எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள். (ஓ-134)

## மின் பிறப்பாக்கி திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் நெடுந்தீவு மத்தி மின் உற்பத்தி நிலைய திறப்பு விழா நாளை புதன் கிழமை பகல் 12.30 மணியளவில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ந. திருலிங்கநாதன் தலைமயில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சின் பொதுசன தொடர்பு அதிகாரி சி.அலன் ரீன் (உதயன்), சிறப்பு விருந்தினராக இலங்கை மின் சார சபை பிரதிப் பொது முகாமையாளர் ஆர்.முத்துரத்தினானந்தன் ஆகியோர் கலந்து கொள்வுள்ளார். ஓ

## வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்துறை உதவி விரிவுரையாளர் ஆ. நித்திலவர்ணன் எழுதிய "இலங்கையில் கல்வியின் நவின போக்குகள்" "புத்தாக்க செருகேடு" எனும் இரு நூல்களின் வெளியீடு நாளை காலை 9.30மணியளவில் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் கல்வியியற் துறைசிரேஷ்டவிரிவுரையாளர் கலாநிதி க. கலாமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பௌதீகவியல்துறைப் பேராசிரியர் ம.கந்தசாமி கலந்துகொள்ளவுள்ளார்.

தமிழ்த்துறை தலைவர் எஸ்.சிவலிங்கராஜா, கல்வியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (திருமதி )அ.சத்தியசீலன் ஆகியோர் வாழ்த்துரையையும், கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (திருமதி) ஜெ.இராசநாயகம் நூல்களின் அறிமுக உரையையும் யாழ். தேசியற்கல்வியல் கல் லூரி உப பீடா திபதி பா. தனபாலன் மற்றும் தமிழத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க.அருந்தாகரன் ஆகியோர் மதிப்பீட்டுரையையும் வழங்கவுள்ளனர். ஓ

# இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவின் கூற்று இலங்கையின் அரசியல் அமைப்பை மீறும் செயல்

## மாற்றுக் கொள்கைக்கான நிறுவனம் கண்டனம்

(கொழும்பு)

இராணுவத் தளபதி சரத்பொன்சேகா தெரிவித்ததாகக் கூறப்படும் சிறுபான்மையினருக்கு எதிரான கருத்தை மாற்றுக் கொள்கைக்கான நிறுவனம் கண்டித்துள்ளது.

கனடாவின் நெஷனல் போஸ்ட் செய்தித்தாளின் ஸ்டுவர்ட் பெல்லுடனான செவ்வியின் போது சரத் பொன்சேகா தனது கருத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

இலங்கை நாடு சிங்களவர்களுக்கு சொந்தமானது. சிங்களவர்கள் இந்நாட்டில் 75 வீதம் என்ற அளவில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தேவையற்ற விடயங்கள் தொடர்பில் கோரிக்கை விடுக்க முடியாது என சரத் பொன்சேகா குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் இவ்வாறான கருத்துக்களை சரத்பொன்சேகா பல்வேறு பொது இடங்களிலும் தெரிவித்திருந்ததாக குறிப்பிட்டுள்ள மாற்றுக்கொள்கைக்கான நிறுவனம் நாட்டின் இராணுவத்தளபதி என்றவகையில் அவர் இவ்வாறான தனிப்பட்ட கருத்தை வெளியிட்டிருக்கக்கூடாது என தெரிவித்துள்ளது.

இது இலங்கையின் ஜனநாயக வலுவையும் இலங்கையின் அரசியல் அமைப்பையும் மீறும் செயல் என்றும் மாற்றுக்கொள்கைக்கான நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் அரசியல் அமைப்பின் கீழ் பணியாற்றுவதையே இராணுவம் கடமையாக கொண்டுள்ளது. இதனைத்தவிர தனிப்பட்ட ரீதியில் செயற்படுவதற்கு அதற்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை. இந்நிலையில் சரத் பொன்சேகாவின் கருத்து இலங்கையின் அரசியல் அமைப்பை மீறும் செயலாகும்.

1961ஆம் ஆண்டில் இலங்கை இராணுவம் முதல் தடவையாக அரசியல் அமைப்பை மீறும் செயலில் ஈடுபட்டது. அன்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை இராணுவம் கட்டுப்படுத்த முனைந்தது.

இதேவேளை இராணுவ வீரர் ஒருவர் தெரிவித்துள்ள இந்தக் கருத்தின் மூலம் பாகிஸ்தானின் நிலைமையை இலங்கையில் தோற்றுவிக்கும் முயற்சிகளை முறியடிக்க வேண்டும் என்றும் மாற்றுக்கொள்கைக்கான நிறுவனம் கோரியுள்ளது.

இவரின் கருத்து தற்போதைய அரசாங்கத்தின் கருத்துக்கு முற்றிலும் மாறுபட்டது என தெரிவித்துள்ள அந்த நிறுவனம் அண்மையில் ஐக்கிய நாடுகளின் சபையில் ஜனாதிபதி உரையாற்றிய போது அனைத்துத்தமிழர்களும் புலிகள் அல்ல. என்ற கருத்தை வெளிப்படுத்தியிருந்தமையை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலையில் இலங்கையில் உரிய நிர்வாக கட்டமைப்பை தோற்றுவிக்க அனைத்து தரப்பினரும் முன் வரவேண்டும் என மாற்றுக்கொள்கைக்கான நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ-6)

## பதில் தொழிலாளர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம் மாநகர சபையில் தற்காலிக தொழிலாளிகளாக முன்னர் பணியாற்றி சேவை இடை நிறுத்தப்பட்டவர்களிலிருந்து சபையின் நிரந்தர தொழிலாளர்கள் விடுமுறையில் செல்லும் நாட்களில் மட்டும் பணியாற்றுவதற்கான பதில் தொழிலாளர்களை தேர்ந்தெடுப்பதற்குரிய நேர்முகப்பரீட்சை ஒன்று எதிர்வரும் 2ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப2.30 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் அமைந் துள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவல கத்தில் இடம்பெறவுள்ளது. நேர்முகப்பரீட்சையின் போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை தவறாது சமர்ப்பித்தல் வேண்டும்.

- கடந்த காலங்களில் மாநகர சபையில் தற்காலிக தொழிலாளியாக கடமையாற்றியமைக்கான சான்றாதாரம் (முன்னர் பணியாற்றிய பகுதி/ கிளைத்தலைவர் களினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்)
- பிறப்புச் சாட்சிப்பத்திரம்
- குறைந்த பட்சம் 5ஆம் தரத்தில் சித்தியடைந்தமைக்கான கல்வித்தகைமை சான்றிதழ்.
- கிராம சேவையாளரது அத்தாட்சிப் பத்திரம் (இப்பத்திரம் 06 மாதகாலத்தினுள் பெறப்பட்டிருத்தல் வேண்டும்)
- தேசிய அடையாள அட்டை.

மாநகர சபையில் முன்னர் கடமை யாற்றியமைக்குரிய ஆதாரங்களைச் சமர்ப்பிக்கத் தவறுவோர் நேர் முகப்பரீட்சையில் பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என யாழ். மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## கொழும்பில் ஹோட்டல்களின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு

### பாதுகாப்பு அமைச்சு உத்தரவு

(கொழும்பு)

கொழும்பில் உள்ள பாரிய ஹோட்டல்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு கேட்டுள்ளது.

இதனையடுத்து ஹோட்டல்களின் பாதுகாப்புக்காக புதிய உபகரணங்களைக் கொள்வனவு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தமக்கு பாரிய நிதிப் பிரச்சினை ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாக ஹோட்டல் உரிமையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் சுற்றுலாத்துறை அமைச்சு பாதுகாப்பு அமைச்சின் இந்த பணிப்புரை தொடர்பில் எவ்வித தகவல்களையும் தாம் அறியவில்லை என குறிப்பிட்டுள்ளது.

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் இடம்பெற்ற ஹோட்டல் குண்டுவெடிப்பை அடுத்தே இந்த நடவடிக்கையை பாதுகாப்பு அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

எனினும் புதிய ஸ்கேனர் அமைப்புகளை செயற்படுத்துவது நிதியின் அடிப்படையில் இயலாத காரியம் என ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-5)

## அரசறிவியல் ஒன்றிய கருத்தரங்குத் தொடர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் ஒன்றியத்தினால் 2 ஆம் திகதிவியாழக்கிழமை அன்று பி.ப 1 மணிக்கு கலைப்பீட புதிய கட்டடத்தொகுதியில் (308 இலக்க விரிவுரை மண்டபத்தில்) 1ஆவது கருத்தரங்குத் தொடர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் அரசறிவியல் ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட பொது அறிவு வினாவிடைப் போட்டியில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. வெற்றியாளர்கள் விபரம் வருமாறு, 1ஆம் பரிசு:- இராமப்பிள்ளை பிரபாலக் ஷ்மி- நெடுந்தீவு கிழக்கு, 2ஆம் பரிசு- பா. சதுர்த்தீபன், வேவில்ப்பிள்ளையார் கோயிலடி, வல்வெட்டித் துறை, 3ஆம் பரிசு- குணரத்தினம் சங்கீதன் சமரபாகு வல்வெட்டித்துறை. ஓ

# திட்டமிட்டபடி டெஸ்ட் தொடர் நடைபெறும் என ஆஸி.ஒப்புதல்

(புதுடெல்லி)

டெல்லி குண்டுவெடிப்பால் இந்தியா–அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் நடைபெறும் மைதானங்களில் எந்த மாற்றமும் தேவையில்லை என்று இந்திய மற்றும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபைகள் ஒப்புக் கொண்டுள்ளன.

திட்டமிட்டபடி இந்த சுற்றுப்பயணத்தை தொடர அவுஸ்திரேலிய அணி ஒப்புக் கொண்டுள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு வருகை தந்துள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் ஒக்டோபர் 9ஆம் திகதி ஆரம்பமாகிறது. மொத்தம் 4 டெஸ்ட் போட்டிகள் நடைபெறவுள்ளன.

அவுஸ்திரேலிய அணி இந்தியாவுக்கு வருகை தருவதற்கு முன்பாக டெல்லியில் குண்டு வெடித்தது. இதனையடுத்து அவுஸ்திரேலியா பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்ய முடிவு செய்தது.

இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் டெல்லியில் மீண்டும் குண்டு வெடித்தது. எனினும் நான்கு டெஸ்ட் போட்டிகள் நடைபெற உள்ள மைதானங்களில் எந்த மாற்றமும் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக குண்டுவெடிப்பு நடைபெற்ற டெல்லியில் டெஸ்ட் போட்டியில் ஆட எந்த தயக்கமும் இல்லை என்று அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

டெஸ்ட் போட்டி நடைபெறும் மைதானங்களை மாற்ற வேண்டும் என அவுஸ்திரேலியா சார்பில் வேண்டுகோள் எதுவும் வைக்கப்படவில்லை. தற்போதுள்ள பாதுகாப்பு நிலை குறித்து அவுஸ்திரேலிய நிர்வாகம் திருப்தி தெரிவித்துள்ளது.

எனவே திட்டமிட்டபடி இந்த தொடர் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகவலை இந்திய கிரிக்கெட் சபை அதிகாரி ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார். மேலும் அவுஸ்திரேலிய வீரர்களுக்கு பாதுகாப்பை பலப்படுத்துமாறு மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உத்தரவிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## எத்தியோப்பிய வீரர் புதிய சாதனை

(பெர்லின்)


எத்தியோப்பிய மரதன் வீரர் கெப்சேலாசி மரதன் போட்டியில் புதிய சாதனை படைத்துள்ளார்.

மரதன் போட்டியில் உலக சாதனைக்கு சொந்தக்காரரான எத்தியோப்பியாவின் கெப்சேலாசி, பெர்லினில் நடைபெற்ற மரதன் போட்டியில் தனது சொந்த சாதனையை முறியடித்து முதல் இடத்தை பிடித்தார்.

அவர் 2 மணி நேரம் 3 நிமிடங்கள் மற்றும் 59 நொடிகளில் முதல் இடத்தை பிடித்தார். சுற்றுச்சூழல் காரணங்களுக்காக இவர் பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒரு நாள் கிரிக்கெற்றில் இருந்து ஓய்வு பெறும் திட்டம் இல்லை

### ஹைடன் தெரிவிப்பு



அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் மத்யூ ஹைடன். சிறந்த ஆரம்ப வீரரான அ[illegible]க்கு அடுத்த மாதம் 37 வயதுபிறக்கிறது. 20[illegible]ஆம் ஆண்டு உலக கோப்பையின் போது அவருக்கு 40 வயதாகி விடும். இதனால் அடுத்த உலக கோப்பை வரை ஹைடனை அணியில் வைத்து கொள்ள அவுஸ்திரேலிய தேர்வு குழு விரும்பவில்லை. அவருக்கு பதிலாக மார்ஷ் வோட்சனுக்கு வாய்ப்பு கொடுக்க அவுஸ்திரேலிய தேர்வு குழு முடிவு செய்துள்ளது.

இதனால் ஒருநாள் போட்டியில் ஹைடனின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது. இதன் காரணமாக ஒருநாள் போட்டியில் இருந்து அவர் ஓய்வு பெறலாம் என்ற தகவல் வெளியானது.

இதை ஹைடன் மறுத்துள்ளார். ஓய்வு பெறும் திட்டம் எதுவும் இல்லை என்று ஹைடன் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,

ஒருநாள் போட்டியில் தொடர்ந்து விளையாடுவதை விரும்புகிறேன். எனது துடுப்பாட்ட திறமை குறையவில்லை. நான் தற்போது நன்றாக விளையாடி கொண்டு இருக்கிறேன். தொடர்ந்து விளையாட விரும்புகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

## நீக்கத்திற்கு நான் காரணமில்லை

## சைமண்ட்ஸுடனான நட்பு கடைசி வரை தொடரும்

### மைக்கெல் கிளார்க் தெரிவிப்பு



சைமண்ட்ஸின் நீக்கத்துக்கு நான் காரணமில்லை. அவருடனான நட்பு ஆயுட் காலம் முழுவதும் தொடரும் என்று அவுஸ்திரேலிய அணியின் துணை தலைவர் மைக்கெல் கிளார்க் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் சகல துறை வீரர் சைமண்ட்ஸ். போட்டி வெற்றியாளர்களில் ஒருவரான அவர் கடந்த மாதம் அணியில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டார். பங்களாதேஷ் தொடரையொட்டி நடந்த அணி வீரர்களின் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் மீன்பிடிக்க சென்றதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சைமண்ட்ஸ் வீட்டுக்கு அனுப்பப்பட்டதற்கு அந்த தொடரில் தற்காலிக அணித்தலைவராக செயல்பட்ட மைக்கெல் கிளார்க்கே காரணம் என்று தகவல்கள் வெளியாயின.

**கிளார்க் விளக்கம்**

இந்நிலையில் மைக்கெல் கிளார்க் அதனை திட்டவட்டமாக மறுத்து இருக்கிறார். இது குறித்து அவர் அளித்த ஒரு போட்டியில் கூறியிருப்பதாவது,

நான் துணை தலைவராக நியமிக்கப்பட்ட போது அணியின் நலன் தான் முதலில் முக்கியம் என்பதை உணர்ந்தேன். சைமண்ட்ஸை வீட்டுக்கு அனுப்பியதற்கு நான் தான் முழு காரணம் என்று தவறாக சித்திரிக்கப்படுகிறது.

அவரை சொந்த ஊருக்கு திருப்பி அனுப்புவது என்ற முடிபு நான் தனிப்பட்ட முறையில் எடுத்த முடிபு கிடையாது. அணி நிர்வாகம்(அணித்தலைவர் பொன்டிங், பயிற்சியாளர் டிம் நீல்சன், அணியின் முகாமையாளர் ஸ்டீவ் பெர்னட் உள்ளிட்டோரும் அடங்குவர்) மேற்கொண்ட முடிவாகும்.

இந்த சூழலில் அவுஸ்திரேலிய அணியில் இருந்து அவரை அனுப்பியது அணிக்கு மட்டுமன்றி அவருக்கும் நல்லது என்று இது வரை நம்புகிறோம்.

ஒன்றை மட்டும் நான் தெளிவுப்படுத்த விரும்புகிறேன். சைமண்ட்ஸுடன் எனக்கு ஆழமான நட்பு உள்ளது. அது சாகும் வரை தொடரும். அவருடன் இணைந்து மீண்டும் கிரிக்கெட் விளையாட மிகவும் விரும்புகிறேன். இவ்வாறு மைக்கெல் கிளார்க் கூறினார்.

## அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் வாய்ப்புக் கிடைத்தால் அசத்துவேன்

### கங்குலி நம்பிக்கை

இந்திய கிரிக்கெட் அணி முன்னாள் தலைவரான கங்குலி, இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சரியாக ஆடாததால் இரானி கோப்பை போட்டிக்கான ரெஸ்ட் ஒப் இந்தியா அணியில் சேர்க்கப்படவில்லை.


இதனால் அவருக்கு அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெற இருக்கும் 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் போட்டி தொடரில் அணியில் இடம் கிடைப்பது அரிதான விடயமாகும்.

இதற்கிடையில் இந்திய அணி தேர்வு குழு தலைவராக இருந்த வெங்சர்க்கார் உள்ளிட்ட தேர்வாளர்கள் மாற்றப்பட்டு, ஸ்ரீகாந்த் தலைமையில் புதிய தேர்வாளர்கள் நேற்று முன்தினம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இதில் கிழக்கு மண்டலத்தில் இருந்து ராஜா வெங்கட் (பெங்கால்) தேர்வாளராக தேர்வு செய்யப்பட்டு இருப்பது தான் மீண்டும் அணிக்கு திரும்ப வழிவகுக்கும் என்று கங்குலி நம்புகிறார்.

இது குறித்து கொல்கத்தாவில் நேற்று முன்தினம் கங்குலி அளித்த பேட்டியில் கூறியதாவது,

நான் அணியில் இடம் பிடிக்க ராஜா வெங்கட் முயற்சிப்பார் என்று நம்புகிறேன். அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடரில் எனக்கு அணியில் இடம் கிடைத்தால் சிறப்பாக செயல்படுவேன். அணியில் இடம் கிடைக்காவிட்டால் பார்க்கலாம்.



இந்தியா - அவுஸ்திரேலியா தொடர் எப்பொழுதும் எதிர்பார்ப்புக்கு உரியதுதான். அதேபோல் இந்த முறையும் வித்தியாசம் எதுவும் இருக்காது. இந்த போட்டி தொடரில் யார் வெற்றி பெறுவார்கள் என்பது கணிப்பது கடினமாகும்.

ஆனால் இந்த போட்டி தொடர் நிச்சயம் கடைசி வரை பரபரப்பாக இருக்கும். நமது அணியில் சுழற்பந்து வீச்சாளர்கள் இருப்பது சாதகமான அம்சமாகும். நமது அணி இந்த தொடரில் சிறப்பாக விளையாடும் என்று நம்புகிறேன். இவ்வாறு கங்குலி கூறினார்.



பாடசாலை துடுப்பாட்டச் சங்கத்துடன் இணைந்து யாழ்.புனித பரியோவான் கல்லூரியினால், கல்லூரியின் மறைந்த முன்னாள் அதிபர் திரு.எஸ்.தனபாலன் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட 6 வீரர்கள் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 19–வயதுப் பிரிவினருக்கிடையிலான துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் வி.ஜோயல்சிகான் விருது வழங்கி கௌரவிக்கப்படுவதையும் சுற்றுப் போட்டியின் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வீரர்களையும் படங்களில் காணலாம். *படங்கள் :– கோபி*

...மாநகர சபை, யாழ்ப்பாண...



# தேசிய மட்ட விளையாட்டுப் போட்டி
# வவுனியா மாணவி புதிய சாதனை; யாழ்.மாணவர்களுக்கு 4 பதக்கம்

(கொழும்பு)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற நான்காம் நாள் தடகளப் போட்டிகளில் வவுனியா சைவப்பிரகாச மாணவி ரி.அனுசியா 21 வயதுக்குட்பட்டோருக்கான தட்டெறிதலில் 41.27 மீற்றர் தூரம் வீசி புதிய சாதனை படைத்து தங்கப்பதக்கம் வென்றார்.

நேற்றைய போட்டிகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 4 மாணவர்கள் பதக்கங்களை வென்றதுடன் ஒருவர் வர்ண விருதைப் பெற்றார்.

2008 ஆம் ஆண்டுக்கான பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டி கொழும்பில் நடைபெற்று வருகிறது. இதில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் தடகளப் போட்டிகள் நடைபெற்று வருகிறது.

நேற்று நடைபெற்ற மூன்றாம் நாள் தடகளப் போட்டிகளில் 21 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் வவுனியா சைவப்பிரகாச வித்தியாலய மாணவி ரி.அனுஷியா 41.27 மீற்றர் தூரம் வீசி முதலிடத்தைப் பிடித்து தங்கப்பதக்கம் பெற்றார்.

இதன் மூலம் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் 21 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதலில் சாதனையாகவிருந்த 38.38 மீற்றர் தூரத்தை தாண்டி 41.27 மீற்றர் தூரம் வீசி அனுஷியா புதிய சாதனை படைத்தார்.

அவர் கடந்த ஆண்டு நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்டப் போட்டிகளில் தட்டெறிதலில் தங்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் அனுஷியா கழகங்களுக்கிடையிலான தேசிய மட்டப் போட்டிகளிலும் தங்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

இதேவேளை 21 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மாணவன் எம்.பிரதீபன் 2-ம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கம் வென்றார்.

இவர் 32.74 மீற்றர் தூரம் வீசியே இரண்டாம் இடத்தைப் பிடித்தார். 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கோல் ஊன்றிப்பாய்தல் போட்டியில் பருத்தித்துறை தும்பளை சைவப்பிரகாச வித்தியாலய மாணவன் கே.சிறிதர்ஷன் மூன்றாமிடத்தைப் பிடித்து வெண்கலப் பதக்கத்தை பெற்றார்.

21 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 110 மீற்றர் சட்டவேலி பாய்தல். (Hurdils) போட்டியில் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் ரி.தர்சன் 2-ம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை பெற்றுக்கொண்டார்.

21வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தல் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவன் கே. கனாதீபன் மூன்றாமிடத்தைப் பிடித்து வெண்கலப் பதக்கத்தைப் பெற்றதுடன் அதே பாடசாலையைச் சேர்ந்த கே.துஷிகரன் 4-ம் இடத்தைப் பெற்றார்.

17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் சி.ஜக்ஷன் 5-ம் இடத்தைப் பெற்று தேசிய வர்ணவிருதை பெற்றார்.

இவர் 400 மீற்றர் தூரத்தை 51.8 வினாடிகளில் ஓடிமுடித்தமை காரணமாக அவரின் விசேட திறமைக்காக தேசிய வர்ண விருது வழங்கப்பட்டது.

இம்முறை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் யாழ்ப்பாண மாணவர்கள் சிறப்பான வெளிப்பாட்டின் மூலம் வட மாகாணத்துக்கு பெருமை சேர்த்துள்ளதாக வடக்கு மாகாண உதவிக் கல்வி பணிப்பாளர் (உடற்பயிற்சி) எஸ்.சத்தியபாலன் தெரிவித்தார். (ச-5)

## குண்டு வெடிப்...

பட்டனர். வாகனங்களும் வழிமறிக் கப்பட்டு சோதனையிடப்பட்டன. வாகனம் மற்றும் அரச தனியார் பேருந்து தரிப்பிடங்க ளிலும் தேடுதலும் சோதனை நடவடிக் கைகளும் இடம்பெற்றன.

இதேவேளை, கைது செய்யப்பட்ட ஏழு இளைஞர்களும் கோட்டை, புறக்கோட்டை, கொம்பனித்தெரு பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ச-5)

## ஊரடங்குச் சட்ட...

உடனடியாக வீடுகளுக்குத் திரும்பினர்.

இதேவேளை யாழ்.குடாநாடு முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்படவுள்ளதாக வெளிவந்த வதந்தியால் யாழ்.நகரில் நின்றிருந்த மக்கள் உடனடியாக வீடுகளுக்குத் திரும்பினர்.

பெருமளவான மக்கள் வர்த்தக நிலையங்கள்,பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பெருமளவான பொருட்களை கொள்வனவு செய்ததையும் காணக் கூடியதாக இருந்தது.

மாகியப்பிட்டியில் படையினர் மீது தாக்குதல் மேற்கொண்ட விடுதலைப் புலிகளை கைது செய்யும் நோக்குடனேயே ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக இராணுவம் கூறியது. (எ)

## நீதிமன்றப்...

ஆணைக்குழு நேற்று குடாநாட்டிலுள்ள ஏனைய 4 நீதவான் நீதிமன்றங்களுக்கும் அறிவித்துள்ளது.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றின் பாதுகாப்பில் யாழ்.சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவரை சிறைச்சாலை பஸ்ஸில் சுன்னாகம் ஊடாக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றுக்கு அழைத்துச் சென்றபோது இனந் தெரியாத ஆயுத தாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தினையடுத்து இந்த நடைமுறையினை நீதிச் சேவை ஆணைக் குழு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

## இரண்டு இடங்களில்...

### கொழும்பில்...

காயமடைந்த பெண் உட்பட அதிர்ச்சியடைந்த இரண்டு பொது மக்களும் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனைப் பணிப்பாளர் ஹெக்டர் வீரசிங்க தெரிவித்தார்.

இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து மல்வத்தை வீதி மூடப்பட்டு பொலிஸாரும் இராணுவத்தினரும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இக்குண்டுவெடிப்பு துறைமுகத்திலிருந்து 100 மீற்றர் தூரத்தில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

### மட்டக்களப்பில்...

ஏனைய 4 பேருக்கு சிறுசிறு காயங்கள் காணப்படுவதாகவும் காயமடைந் தவர்களில் மூன்றுபேரைத்தவிர மற்றைய வர்கள் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அதேவேளை ஆரையம்பதி வைத்திய சாலைத் தகவலின்படி ஏழுபேர் அங்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை புனித ரம்ழான் பண்டிகையைக் கொண்டாட முஸ்லிம்கள் தயாராகி வரும் இவ்வேளையில் இப்படியான ஒரு சம்பவம் இடம்பெற்றது கவலைக்குரியது என்று பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவரான முகமெட் இப்ராஹீம் முகமெட் சுகைதீர் கவலை வெளியிட்டுள்ளார். (ச-3)

## இராணுவச்...

நின்ற மூவரும் படையினர் மீது இரண்டு கைக்குண்டுகளை வீசிவிட்டு தப்பிச் சென்றனர்.

பின்னர் அப்பகுதியில் படையினர் தேடுதல் நடாத்தியபோது இரு கைக்குண்டுகள் மூன்று இராணுவச் சீருடைகள் மற்றும் கிரனைட் செலுத்தி என்பவற்றை மீட்டுள்ளனர் என பாதுகாப்பு அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## முன்னாள் யாழ். அரச அ...
## பிரான்ஸ் தூதுவராக நிய...

(கொழும்பு)

பிரான்ஸுக்கான புதிய இலங்கை... வராக லயனல் பெர்னாண்டோ வி... பதவியேற்க இருப்பதாக தெரிவிக்கப்... ளது.

நிர்வாக சேவையில் திறமை... செயற்பட்ட இவர் யாழ்ப்பாணத்திற்கா... சாங்க அதிபராகவும் பணியாற்றியுள்...

அந்தக் காலகட்டத்தில் தமிழ் மக்... நன்மதிப்பை பெற்றிருந்ததுடன் பல... விருத்தி திட்டங்களையும் மேற்கொண்... தார்.

இவர் பின்னர் அரசாங்கத்தின் ஊ... துறை,சுற்றுலாத்துறை,வெளிவிவ... மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்... ளின் செயலாளர் பதவிகளையும் வ... ளார்.

இது தவிர நெதர்லாந்துக்கான... வராகப் பணியாற்றியுள்ள இவர் ... கிழக்கு மாகாண சபையின் ஆளுநர் ... ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலை... கவும் கடமையாற்றியிருந்தமை குறி... தக்கது.

## ஒரே குடும்பத்தைச் சே...
## 6 பேர் நீதிமன்றில் தஞ்...

(பருத்தித்துறை)

உயிருக்கு அச்சுறுத்தல் என... வித்து 4 குழந்தைகள் உட்பட 6 பேர் ... இளம் குடும்பம் பருத்தித்துறை நீத... நீதிமன்றில் தஞ்சமடைந்துள்ளனர்.

வரணியைச் சேர்ந்த இக் குடும்ப... தாய், தந்தை மற்றும் அவர்களின் 4 ... தைகள் உட்பட்ட 6 பேரே இவ்வாறு பரு... துறை நீதவான் நீதிமன்றில் உயிருக்கு ... காப்பு கோரி தஞ்சமடைந்துள்ளனர். (ச-5)

## இராணுவத்...

யுத்தத்தின் பின்விளைவுகளை சிங்கள ம... கள் உள்ளிட்ட அனைவரும் எதிர்காலத்தி... எதிர்நோக்க நேரிடும் எனவும் நாடாளுமன்... உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளா...

சமாதானத்தின் மூலமே ஜனநாயகத்... எட்ட முடியும் எனவும் இதற்கு கருணா மற்று... பிள்ளையான் ஆகியோர் சிறந்த உதாரண... களாக திகழ்வதாகவும் அவர் சுட்டிக்காட்டி... ளார்.

சமாதான உடன்படிக்கை கைச்சாத்... காலத்திலேயே குறித்த விடுதலைப் ... உறுப்பினர்கள் ஜனநாயக நீரோட்டத்... பிரவேசித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ நடவடிக்கைகளின் மூலம் ... போதும் சமாதானத்தைப் பெற்றுக் கொ... முடியாது என அவர் மேலும் தெரிவித்... ளார்.

யுத்தம்மூலம் தற்காலிகமான ஓர் தீ... தியை பெற்றுக் கொள்ள முடிந்தபோதி... தூர நோக்குடன் சிந்தித்துப் பார்த்தால் யுத்... தின் மூலம் கசப்பான அனுபவங்கள் மாத்... மே எஞ்சியிருக்கின்றன என கபீர் ஹா... தெரிவித்துள்ளார். (ச-...

அன்பார்ந்த
அதிபர்களே, ஆசிரியர்களே,
மாணவர்களே!
உங்கள் அபிமானத்திற்குரிய
வலம்புரியில்
மிகவிரைவில்
வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் தயாரிக்கப்படும்
★ க.பொ.த (சா/த) மாதிரி வினாத்தாள் (இதுவரை வெளிவராத புதிய பாடத் திட்டம்)
★ க.பொ.த (உயர் தர) மாதிரி வினாத் தாள். (ஒவ்வொரு பாடத்திலும் அலகு ரீதியான விளக்கங்களுடன்)
★ 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் என்பன வெளி வரும்.

Microsoft Certified
Systems Engineer / Administrator
★ குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
★ Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★ வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 01.10.2008 09.00AM
Become an Engineer
விபரங்கள் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com

# நியாயமான தீர்வுத்...

அமெரிக்காவில் இடம்பெற்ற செப்ரெம்பர் 11ஆம் திகதி தாக்குதல் சம்பவத்துக்குப் பின்னர் எந்தவொரு அரசியல் ரீதியான வன்முறையும் பயங்கரவாதச் செயற்படாகவே முத்திரை குத்தப்படுகிறது.

இது தனிநாட்டுப் போராட்டத்துக்கான சாதகமற்ற சூழல் தோன்றியமைக்கான முதலாவது காரணமாக அமைகிறது. என கொழும்பிலிருந்து வெளியாகும் நேஷன் பத்திரிகைக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் சிறிகாந்தா இதனைக் குறிப்பிட்டார்.

சேர்பியாவின் கொசோவோ மற்றும் ஜோர்ஜியாவின் ஒசெஸ்ரியா போராட்டங்கள் மேற்குலகில் இடம்பெற்ற போராட்டங்கள்.

ஆனால் தமிழர் விடுதலைப் போராட்டம் அவ்வாறல்லாது ஆசியாவின் பிரச்சினையாக இருப்பதால் மேற்குலகின் ஆதரவைப் பெறமுடியாதிருப்பதாகக் கூறினார்.

ஆசியாவில் மாலைதீவுகளைத் தவிர இலங்கைக்கு அண்மையிலுள்ள அனைத்து நாடுகளிலும் பிரிவினைவாதப் பிரச்சினைகள் காணப்படுகின்றன அதேநேரம்,முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலையின் பின்னர் இந்தியா இலங்கை விடயத்திலிருந்து தள்ளியிருப்பதும் தமிழர் போராட்டத்துக்கான சூழல் சாதகமற்றிருப்பதற்குக் காரணம் என்று குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளின் தலைமையில் முன்னெடுக்கப்படும் தமிழர்களின் தனிநாட்டுப் போராட்டத்துக்கான உலகச் சூழல் இவ்வாறு சாதகமற்றதாக இருப்பினும், அரசியல் அபிலாஷைகளை வெல்வதற்காகப் போராடும் நீண்ட வரலாற்றை சிறுபான்மைத் தமிழர்கள் கொண்டிருக்கிறார்கள்.

1948ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்த பின்னர் இலங்கையின் இரண்டாந்தரப் பிரஜைகள் போல நடத்தப்படுவதாக தமிழர்கள் உணருகிறார்கள். இந்தப்பிரச்சினை அரசியல் பிரச்சினையாக மாறி மெதுவாக இராணுவப் போராட்டமாகத் தோற்றம்பெற்றது.

எனினும், ஐக்கிய இலங்கைக்குள் அர்த்தபூர்வமான அரசியல் தீர்வொன்று தற்பொழுது முன்வைக்கப்பட்டாலும் அதனை ஏற்... கொள்வதற்குத் தமிழர்கள் தயாராகவே ... கிறார்கள் என்றார்.

எங்கே அந்தத் தீர்வு? அர்த்தபூர்வ... தீர்வுத்திட்டமொன்று தமிழர்கள் முன்னி... யில் வைக்கப்பட்டதா? என அவர் கே... யெழுப்பினார்.

நாளைக்கே நியாயமான தீர்வுத்... மொன்றுடன் இலங்கை அரசாங்கம் வ... யின் அந்தச் சந்தர்ப்பத்தைத் தமிழர்கள்... போதும் நழுவ விடமாட்டார்கள்.

இதனைத் தமிழ்த் தேசியக் கூட்... பின் வார்த்தையாக எடுத்துக் கொள... கள்.

தமிழர்கள் அடைய விரும்பும் அ... அபிலாசைகள் பற்றி சர்வதேச ச... நன்கு அறிந்து கொண்டிருப்பதாக... நம்புவதாகவும், நேஷன் பத்திரிகைக்கு... கிய செவ்வியில் தமிழ்த் தேசியக் கூட்... பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிகா... மேலும் கூறினார். (ச-...

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்ப...